
பலசுவை இதழ்: 1 சித்திரை 2000

# ரோஜா



"நலம் நலமறிய ஆவல்..."

- அனுராதா ஸ்ரீராம்

Singapore 1.10 Malaysia 2.50 UK .49 Swiss ... Germany 1.50 France ... Norway 5.75 USA .75 CAN $1.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்




# ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயம்

## SRI VARASITHTHI VINAAYAGAR HINDU TEMPLE OF TORONTO

3025 Kennedy Road, Unit. 10, Scarborough, ON. M1V 1S3
( Finch & Kennedy - North of Finch)

3025, கென்னடி றோட், யூனிட் இல - 10, ஸ்காபரோ


தொலைபேசி - (416) 291 8500

**அனைவரும் வந்து தரிசித்து இறையருள் பெறுக!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்டெபியின் 34 நிமிடங்கள்



## Redspots





## ரோஜாவின் ஆசை!

நடிகை ரோஜாதான் இப்போதைக்கு அதிக படங்களில் நடிக்கும் கதாநாயகி. வந்தவரை லாபம் என்று புதிய படங்களில் நடித்துக் கொண்டிருக்கும் ரோஜா கோர்ட்டு படிக்கட்டில் ஏறத் தவறுவதில்லை. அதே நேரத்தில் கோர்ட்டில் கடன் பாக்கியையும் கட்டி வரும் ரோஜா திருமணத்தைத் தள்ளிப்போட்டிருக்கிறார்.

முகவரி

Canada ROJAH F.P.P.O., P.O.BOX 45516
747 DON MILLS RD, North York, ON. CANADA M3C 3S4
Tel: **416-425 4206** Fax: **416-425 1202**
email: editor@rojah.com web: www.rojah.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவிலிருந்து வாழ்த்துகள்!

கனடா - வாழ்வளிக்கும் கனவு பூமி!
கானடா - இதமளிக்கும் இனியராகம்!
ரோஜா - கண்ணையும், கருத்தையும் - ஏன்
நுகர் புலனையும் வசீகரிக்கும் வண்ணமலர்!

ஒருவகையில்...
இவைகளின் கூட்டுச் சேர்க்கை
இந்த சஞ்சிகையின் பெயர்!

நான் சுவாசிக்கும் மொழியில்...
நான் நேசிக்கும் மக்களுக்காக!
இந்த சஞ்சிகை
'ஆனந்த'மாக ராஜநடைபோட
வண்ணக்கலவையில்,
எண்ணங்களின் வெளிப்பாடு
திண்ணமாக வெற்றிபெற
கண்களில் நீர்மல்க
கனிவான பிரார்த்தனை -
செய்வது, உங்கள்

அப்துல் ஜ(ப்)பார்

இன்குலாப்
சென்னை-14

அன்புள்ள தோழர்,

வணக்கம்.

'கனடா ரோஜா' மலர்வது குறித்து மகிழ்ச்சி
எந்த மண்ணில் மலர்ந்தாலும்
ரோஜா
மாற்றிக் கொள்ளாது தன் மணத்தை....

வேற்று மண்ணில் சிறகு விரித்த நீங்கள்....
அடைகாத்த கூடுகளையும்!....
அடையாளம் காட்டிய மொழியையும்...
ஏந்திய நினைவுகளோடு இயங்குவதை அறிவேன்.

உங்கள் இதழ் முயற்சி எல்லாப் பூக்களையும் தொடுக்கும். புலம் பெயர்ந்து வாழ நேர்ந்தாலும் கலைகளில் புலமை பெயராமல் வாழும் தமிழீழ மக்கள், கனடா மண்ணில் நின்றும் தமிழ் மொழிக்கு அழகும் வளமும் சேர்ப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

உங்கள் விடுதலை மெய்ப்படும்போது, அது கனடா ரோஜாவின் மணத்தாலும் நிறைவு பெற வேண்டும்என்று வாழ்த்துகின்றேன்.

அன்புடன்
இன்குலாப்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியாவிலிருந்து
## உணர்ச்சிக் கவிஞர்

வண்ணப் பூங்காவில் வேரை
வைத்த பூ ரோஜா வேலி
மண்ணுக்கு வெளியே என்றும்
மலர்ந்ததாய் வரலாறு இல்லை
கண் முன்னே ஈழ ரோஜா
கனடாவில் பூத்தல்
உண்மையில் வியப்பே! என்றன்
உளம்துள்ள வாழ்த்துகின்றேன்!



காசி ஆனந்தன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் [கண்]டு ரசித்த காட்சி...

## "எனக்கு பிடித்த காட்சியே கலைஞருக்கும் பிடித்திருக்கு!"

## உ...ஸ்.......

*'காந்தியின் கொள்கையை உயர்த்தியது 'ஹேராம்''! தாழ்த்தியது காங்கிரஸ்.*
*(அடிதடி)*

# ஹேராம்


ராம் என்று ஒரு கதாபாத்திரம் அதுதான் கமல் ஏற்றிருக்கின்ற பாத்திரம். அவருடைய நண்பராக ஒரு முஸ்லிம் அம்ஜீத் நண்பர் ஷாருக்கான் ஏற்றிருக்கின்ற பாத்திரம். இருவரும் நண்பர்கள். ஆனால் இந்தியாவிலே ஏற்பட்ட இந்து - முஸ்லிம் கலவரத்தின் காரணமாக அடிக்கடி மதவேறுபாடுகள் ஏற்படுகின்றன.

அப்படி ஏற்படும்போது ஒருநாள் ராம் தன் கையிலே உள்ள துப்பாக்கியைக் காட்டி இந்துக்கள் அதிகமாக கொல்லப் படுகிறார்கள் என்று வாதிடுகிறார். இந்த வாதம் முற்றி ராம் கையிலே உள்ள துப்பாக்கியை நீட்டி எல்லோரும் என் முன்னால் நிற்காதீர்கள். எங்கேயாவது போய்விடுங்கள். கண்காணாமல் போய் விடுங்கள் என்று சத்தம் போடுகிறான். அப்போது அம்ஜீத் என்ற அந்த முஸ்லிம் நண்பன் கேட்கிறார், எல்லோரையும் எங்கேடா போகச் சொல்றே? என்று நண்பனைப் பார்த்துக் கேட்கிறார். அதற்கு ராம் உன் ஜின்னாவோட நாடு பாகிஸ்தான் இருக்கே, அங்கே போங்க என்று சொல்கிறான். "ஜின்னாவோட சொந்த மகளே இந்தியாதான் தன்னுடைய நாடு என்று சொல்லி இங்கேதான் இருக்காங்க, நான் காந்தியோட மகன் நான் இங்கேதான் இருப்பேன்" என்று அந்த முஸ்லிம் நண்பன் சொல்கிறான். உடனே ராம் "இதை யாரைக் கேட்டுடா நீ முடிவு பண்ணினே?" என்று கேட்கிறார். "நான் யாரைடா கேக்கணும்? இது என்னோட நாடு?" என்கிறார் அம்ஜித். இந்த உணர்ச்சி முஸ்லிம்களுக்கு இருக்கிறது என்பதை நிலைநாட்டும் வகையில் இருக்கிறதோ இல்லையோ, இருக்க வேண்டும் என்பதை எடுத்துக் காட்டும் வகையிலும் தான் இந்தப் படம் அமைந்திருக்கிறது. இந்த முஸ்லிம் ஒற்றுமையை எடுத்துக் காட்டி ஒற்றுமைக்கு வழிவகுக்கின்ற படம்தான் இந்தப் படம். அதில் நான் கண்டு ரசித்த காட்சி இது.

• விமர்சகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'ஹேராம் திரைக்கதை புத்தக வெளியீட்டு விழாவில் கலைஞர் விபரித்த காட்சி...'

விழாவில் கமலின் மகள் அக்ஸலா முதல் பிரதியை பெற்றுக்கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரோஜா
பல்சுவை இதழ்: 1

CANADA ROJAH
ISSN 1492-4501

சித்திரை 2000
ஏப்ரல் 14 - மே 13, 2000

பிரதம ஆசிரியர்:
**விஜய் ஆனந்த்**

சிறப்பு ஆசிரியர்:
**கவிஞர். வி. கந்தவனம்**

ஆசிரியர் குழு:
**குரு அரவிந்தன்**
**கலைவாணி இராஜகுமாரன்**
**எஸ். ராஜ்மோகன்**
**கௌதம்**

நிர்வாக ஆசிரியர்
**அனுஷியா ஆனந்த்**

பிரசுரம்/அச்சமைப்பு/ வடிவமைப்பு:
**தமிழ் கிரியேட்டஸ்**
**ரோஜா வெளியீட்டகம்**

அட்டை அச்சடிப்பு:
**விவேகா அச்சகம்**

விநியோகம்:
**பரமு சிவா (ரொறன்ரோ)**

மொன்றியல்: **திரு. மோகன்**
**மார்சே மாருதி**
155 Jeantelon East, Montreal,
Que. S2R 1S8
Tel: **514-497 8002**

வன்கூவர்: **திரு. பாலா**
'ரோஜா' தொலைக்காட்சித்
தயாரிப்பாளர்
Tel: **604-327 6977**

லண்டன்: **நடா மோகன்**
'தென்றல்' வானொலித் தயாரிப்பாளர்
Tel: **0181 586 9636**
email: aruvi@tamilboard.com

மலர்ந்த ரோஜா - பேசும்
ஆசிரியரின் பேனா—

# இதயராகம்

தமிழ் உள்ளங்கள் அனைவருக்கும் தமிழ் புதுவருட வாழ்த்துகள்!

1992ம் ஆண்டு கனடா தினமான ஜுலை முதலாம் நாள் தனது முதல் இதழை விரித்த 'ரோஜா' பல நூற்றுக்கணக்கான வாசகர் நெஞ்சங்களில் இடம் பிடித்துக்கொண்டது உண்மைதான்.

புத்தாயிரத்தாண்டில் முதல் தமிழ் வருடப் பிறப்பில் புதிய பரிணாமமாக, புதிய வீச்சாக, புதிய அறிமுகமாக 'கனடா ரோஜா' சர்வதேச பல்சுவை இதழாக புலம்பெயர்ந்த மண்ணில் தனது வேர்களை ஆழமாக பதிக்கின்றது.

தமிழ் என்ற அன்பான, இனிமையான, மொழி மேல் உயிர் கொண்டு, தமிழ் பேசும் மக்கள், வளம் கொண்ட இனமாக தலைசிறந்து வாழ்தல் நன்றென, மலரும் இச் சஞ்சிகைக்கு உங்கள் ஆதரவைத் தருவீர்கள் என்று முழுமையாக நம்புகின்றோம்.

தமிழ் பேசும் சமூகத்தில் இலை மறை காய்களாக வாழ்ந்து வரும் எழுத்தாளர்களை, கலைஞர்களை, ஓவியர்களை, தொழில்நுட்ப வியலாளர்களை வெளிக்கொணரும் பணியே எமதானது.

முள்ளில் மலரும் 'ரோஜா' உங்கள் இல்லத்தில் மட்டுமல்ல நெஞ்சங்களிலும் மலர்ந்து மணம் பரப்பும் என்பதை வருங்காலம் நிஜமாக்கும்.

தாம்இன் புறுவது உலகுஇன் புறக்கண்டு
காமுறுவர் கற்றுஅறிந் தார்.

தாம் இன்புறுவதற்குக் காரணமான கல்விக்கு, உலகம் மகிழ்வதைக் கண்ட கற்றறிந்தோர் மேன்மேலும் அக் கல்வியைக் கற்பார்.

- திருக்குறள் 399


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விஜய்யின் நிழல்!

கல்யாண விஷயத்தில், எந்தவிதமான சலசலப்புக்கும் ஆளாகாமல் இருந்தவர் நடிகர் விஜய்! காதல் கத்தரிக்காய் என்று போகாமல். பெற்றோரின் சம்மதத்தோடு வாழ்க்கைத் துணைவியைத் தேடிக் கொண்ட பெருமை அவருக்கு உண்டு! விஜய் படப்பிடிப்புக்குப் போகும் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14

## துர்க்காதுரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி

1993 ஆகஸ்ட் மாதத்தில் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான நிர்வாக சபை வெள்ளி விழா மலர் ஒன்றை அனுப்பி வைத்தார்கள். உள்ளே ஒரு கடிதம். கடிதத்தைப் படித்துவிட்டு மலரை விரித்தேன். அதில் அவரது முன்னுரை இவ் விதம் தொடங்குகின்றது:

'இருபத்தைந்து ஆண்டுகள்! ஆம்! எமது கண்கண்ட தெய்வம் துர்க்காதேவியின் திருக்கோயில் எழுச்சியும் வளர்ச்சியும் கண்ட காலம்; எம்மை மகிழ்வித்து இறை பணியில் ஏற்றி வைத்த காலம்;...

காலம் எவ்வளவு விரைவாகச் சுழல்கிறது! ஞாலம் எவ்வளவு வேகமாக மாறுகிறது! ஆனால் மனம் பதிவுசெய்துகொண்ட சில நினைவுகள் மட்டும் பசுமையாகவே இன்றும் இருக்கின்றன. 1974ம் ஆண்டில் துர்க்காதேவி ஆலய நிர்வாக சபையினர் தங்கம்மா அப்பாகுட்டி அவர்களுக்குப் பாராட்டுவிழா ஒன்றை எடுத்தனர். அந்த விழாவிலே வாழ்த்துப் பா யாத்துச் செல்விக்கு வழங்குவதற்குச் சிறியேனை அணுகினர். விழாவுக்கெனப் பாடிய பாடல்களில் ஒன்று நினைவு அலைகளைப் பசுமைப் படுத்திக்கொண்டு எழுந்தது:

நிதிமிகு கருத்தால் நெஞ்சு
　　நெகிழ்விரி வுரையால் விஞ்சு
மதிநல வளத்தாற் கொஞ்சு
　　மணிக்குரல் திறத்தாற் செஞ்சொல்
அதிமது ரமதால் பக்தி
　　விளைத்திடும் அழகால் அம்ம
புதுநலம் தருவாய் உண்மைப்
　　பொருளறி திருவே வாழி!

பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களை நான் முதன்முதலில் சந்தித்தது கூட்டம் ஒன்றிலேதான். அவர்கள் இல்லாத சமய நிகழ்ச்சிகள், கலைவிழாக்கள், இலக்கியக் கூட்டங்கள் இல்லையெனலாம். அவர்கள் சிறப்புச் சொற்பொழிவு என்றால் நான் கவியரங்கம் அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டிமன்றமாக இருக்கும்.பட்டிமன்றங்கள், கருத்தரங்கங்கள் என்பவற்றிலும் அவர் பங்குபற்றுவதுண்டு.

பட்டிமன்றங்கள் பலவற்றில் அவர்களுடன் பங்குபற்றும் வாய்ப்புகளும் எனக்குக் கிடைத்திருக்கின்றன. பட்டிமன்றங்கள் பொதுமக்களுக்கு நல்ல கேள்விச் செல்வத்தை அள்ளி வழங்கும் நிகழ்ச்சிகளாக அமைந்தன. இலக்கிய, சமூக விடயங்கள் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும். வாசிப்புப் பழக்கம் குறைவான எமது மக்களுக்கு பண்பாட்டுக் களஞ்சியங்களாக விளங்கும் சிலப்பதிகாரம், கம்பராமாயணம், வில்லிபாரதம் போன்ற காப்பியக் கதைகளைச் சுவையான விவாதங்கள் மூலம் நினைவுபடுத்துவோம். அவற்றோடு அன்பு, பண்பு, அறம், நீதி, நியாயங்கள் முதலியவற்றையும் எடுத்து விளக்குவோம்.

இலக்கியங்களில் தங்கம்மா அவர்கள் ஆழ்ந்த புலமை வாய்தவர். அத்துடன் எடுத்த விடயத்தை அழமாக பேச்சும் திறனும் மிகுந்தவர். தங்கம்மா என்றால் கூட்டம் திரண்டு வரும். பட்டிமன்றத்தை மக்கள் மத்தியில் பிரபல்யமாக்கியவர்களில் அவர் பிரதானமானவர். இவ்வித பிரபல்யமான நிகழ்ச்சியில் தகுதியில்லாதவர்களும் கலந்துகொண்டு பிரபல்யமாக முனைந்தனர். கருத்தை விவாதிக்கத் தெரியாது விவாதித்துக் குதர்க்கங்கள் புரிந்தனர். இதன் விளை வாக தங்கம்மா, ச. விநாயகமூர்த்தி போன்ற பண்பாளர்கள் பட்டிமன்றங்களைத் தவிர்க்கலாயினர். அவர்கள் இருவரையும் சுத்தமான சமயத்துறை சுவீகரித்துக் கொண்டது.

காலப் போக்கில் அடியேனையும் செல்வி தங்கம்மா சமயத் துறைக்கு இழுத்துக் கொண்டார். எனக்கு சமய அறிவு குறைவு. நான் கிறிஸ்தவ கல்லூரியில் அதிக காலம் கழித்தவன். அக்காலத்தில் கிறிஸ்தவ பாடசாலைகளில் சைவ சமயம் கற்பிக்கப்படுவதில்லை. விவிலிய நூலை வேதக் கோயிலுக்குள்ளேயே இருத்திச் சொல்லித் தந்தார்கள். நுணுவில் கணேச வித்தியாசாலையில் பாடமாக்கிய சில தேவாரங்கள், உயர் வகுப்புகளிற் கற்ற, பின்னாளிற் கற்பித்த தமிழோடு கலந்து வந்த சமயம் என்பவற்றைத் தவிர வேறொன்றும் அறியேன் பராபரமே என்கின்ற நிலை.

கவியரங்கங்கள், பட்டிமன்றங்கள், நாடக வரங்கங்கள், ஆசிரிய/கல்வி அரங்கங்கள் என ஓய்விலாது ஓடித்திருந்த என்னை தங்கம்மா அவர்கள் ஆட்கொண்டு சமய அரங்கில் ஏற்றியது என்மீது அவர் கொண்டிருந்த நம்பிக்கையையே எடுத்துக் காட்டியது.

எனது மனைவிவழி உறவினர் தனலக்குமி புத்தகசாலை திரு. மு. சபாரத்தினம் அவர்கள் தனித்தனியாக அமைந்த அப்பர், சம்பந்தர், சுந்தரர் தேவாரங்களின் தொகுதிகள் மூன்றையும் திருவாசகம் ஒன்றையும் தந்துதவினார். ஆரம்ப பேச்சுக்களை நல்ல ஆயத்தங்களுடன் நிகழ்த்தலானேன். நான் சமயச் சொற்பொழிவுகள் செய்துவருவதை அறிந்த வயாவிளான் மத்திய மகா வித்தியாலய அதிபர் உயர்தர வகுப்புக்கு இந்து நாகரிகம் புகட்டும்படி பணித்தார். இந்தப் பணியும் எனது சமய அறிவை நன்கு வளர்க்க உதவியது.

ஒருமுறை வயாவிளான் வைரவர் கோயிலில் அடியேன் பேசியபின் தங்கம்மா அவர்கள் பேச நேர்ந்தது. எனது பேச்சைப் பாராட்டியவாறு தனது பேச்சை ஆரம்பித்தார். இவ்விதம் பல இடங்களில் எனது சமய அறிவுக்கு நேர்முகச் சான்றிதழ் வழங்கியதோடன்றி, தனக்கு நேரமில்லாத நாட்களில் கந்தவனத்தைக் கேளுங்களென மறைமுகச் சிபார்சுகளும் செய்திருக்கின்றார். அவர் அளித்த ஆதரவு எனக்கு அதிக நம்பிக்கையை ஊட்டியது.

துர்க்கை அம்மன் கோயிலிலும் என்னை அழைத்துப் பேச வைத்தார். அம்மனின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலய வருடாந்த உற்சவ காலத்தில் சமயச் சொற்பொழிவுகளை நிகழ்த்துபவர் பெரும் சைவசித்தாந்த வல்லுநர்கள். அவர்கள் வரிசையில் செல்வி அவர்கள் சிறியேனையும் அழைத்துப் பெருமைப் படுத்திய நாட்களை மறக்கமுடியாது.

எனது தனிப்பட்ட, பொதுப்பட்ட முயற்சி களுக்கெல்லாம் மிகுந்த ஆதரவு காட்டிச் செல்வி அவர்கள் ஊக்குவித்திருக் கிறார்கள். எனது நூல் வெளியீடுகள் பலவற்றில் பங்குகொண்டு உரையாற்றியி ருக்கின்றார். யாழ். இலக்கிய வட்ட விழாக்களுக்கு அல்லது பாடசாலை விழாக்களுக்கு அழைப்புகள் விடுத்தபோ தெல்லாம் மறுக்காது முதன்மையளித்துப் பங்குபற்றி சிறப்பித்திருக்கிறார். 1978ம் ஆண்டு அக்டோபர் மாதம் 13ம் திகதி எனது மகளின் பரதநாட்டிய அரங்கேற்ற மும் செல்வி அவர்களின் தலைமையி லேயே நடைபெற்றது.

தங்கம்மாவின் சக்தி துர்க்கை அம்மனின் அருட்சக்தி என்பதே எனது நம்பிக்கை. அவரது அறிவு, பேச்சாற்றல், வாழ்க்கை நிலை என்பனவெல்லாம் காரணம் பற்றி யவை. சைவநீதியை உலகமெலாம் பரப்பு வதற்கெனத் துர்க்கா தேவியால் வழங்கப் பெற்ற நன்கொடைகள் அவை. அவற்றை வெகு சிறப்பாகவே பயன்படுத்தி சமயப் பணிகள் புரிந்து வரும் தங்கம்மாவின் பெருமை சொல்லி முடியாது.

ஈழம், துர்க்காபுரம், வெளியுலகமென இவரது சமயப் பணிகள் முப்பெரும் பரப்பு களை அளாவியன. இவரது குரல் வளம் சங்கநாதம் போன்றது. கேட்டுக் கொண்டே இருக்கலாம் நேரத்தை, பசியை, நோயை, பிறகவலைகளை எல்லாம் மறக்கச் செய்யும் ஒரு மந்திர சக்தி இந்தக் குரலுக்கு உண்டு. இந்த மந்திரக் குரல் அள்ளி வழங்கும் அறிவுச் செல்வம் அளப்பரியது. வேதாகமங்கள், இலக்கண நூல்கள், சங்க நூல்கள், சைவ சாத்திர நூல்கள், தேவார திருவாசகங்கள், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம், கம்பரா-மாயணம், பாரதம் இக்கால இலக்கி யங்களெனபண்டிதையும் சைவப் புலவ ருமான தங்கம்மா அப்பாக்குட்டியாரின் அறிவு பரந்து விரிந்தது; ஐயமறத் தெளிந்தது. அதனைக் காலம் இடம் பொருள் உணர்ந்து கேளாரும் வேட்ப எடுத்துரைக்கும் மதிநுட்பமும் நாவன்மை யும் கற்றோரையும் மற்றோரையும் வியப்படையச் செய்வன.

தமது நாவன்மையால் ஈழத்து மக்களை ஈர்த்துப் புகழ்பெற்ற நிலையில், வெளிநாடு களிலும் இவரது சமயப் பணிகள் தொடரலாயின. தமிழ்நாடு, மலேசியா, சிங்கப்பூர், இங்கிலாந்து ஆகிய நாடுகளில் அறிவொளி பரப்பி ஆன்மீக வாழ்வை நிலைநாட்டும் பணிகளிலும் துர்க்காதேவி ஈடுபட வைத்தார்.

இவரது சமயப் பணிகளுக்கு மையமாக அமைந்தது தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயம். ஆலயத் தொண்டுகளில் இவருக்கு நீண்டகாலமாகவே தொடர்பு இருந்ததெனினும் 1966ம் ஆண்டளவில் கோயில் நிர்வாக சபையில் இவர் தனாதிகாரியாகத் தெரிவு செய்யப்பிட்ட தைத் தொடர்ந்து அதன் அபிவிருத்திப் பணிகளில் அதிகம் ஈடுபட நேர்ந்தது. 1977ம்ஆண்டு முதல் நிர்வாக சபையின் தலைமைப்பதவியும் இவரை வந்தடைந் தது. 1988இல் தர்மகர்த்தாசபைத் தலை வராகவும் தெரிவுசெய்யப்பட்டார்.

ஈழத்துச் சைவத் துறைத் தலைவி தமது குலதெய்வமாகிய துர்க்காதேவி குடியி ருக்கும் கோயில் நிர்வாகத்துக்குப் பொறுப் பேற்றது வியப்பில்லை என்றாலும், கோயில் நிர்வாகத் துறையில் ஆண்களே ஆதிக்கம் செலுத்திய நிலையை இவரது தலைமை மாற்றியமைத்தது ஒரு வரலாற்றுநிகழ்ச்சி மட்டுமன்றி பெண் உலகம் பெருமிதம் கொண்டெழுந்த புதுயுகத்தின் உதயமாகவும் கருதப்படு கின்றது. துர்க்காதேவியின் அருளால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட்ட இவரது நிர்வாகத்தில் ஆலயம் படிப்படியாக வளர்ச்சியடைந்து எல்லா வசதிகளையும் கொண்ட இணையற்ற தலமாக - துர்க்காபுரமாக மாறலாயிற்று.

தங்கம்மா அவர்களின் சேவையைப் பாராட்டி எத்தனையோ பட்டங்களை அளித்து மக்கள் மகிழ்ந்தனர். அவற்றுள் துர்க்காதுரந்தரி, சிவத்தமிழ் செல்வி என்பனவே பெரிதும் வழங்கப்படுகின்றன. அவற்றுள்ளும் துர்க்கா துரிந்தரி என்பதே அவருடன் ஒட்டிக் கொண்டுவிட்ட பட்டமாகிவிட்டது. காரணம் அதுவே அவரது தொழில்; நித்திய தொழில்; தொழும்பாய தொண்டு; துர்க்காதேவியின் மறுவடிவமே துர்க்கா துரந்தரி என்பது பலரது நம்பிக்கை.

சக்தி வழிபாட்டை ஈழத்திலே தழைக்கச் செய்த முதல்வர் துர்க்காதுரந்தரி. துர்க்கா தேவியின் அருளை முன்வைத்து சிவத்த்மிழைச் செழிக்கச் செய்தவர். அவரின் சிவத்தமிழைக் கேட்க மக்கள் ஆர்த்தெழுந்தனர். எங்ஙனும் துர்க்காதேவி என்பதே பேச்சாயிற்று! துர்க்காதுரிந்தரி என்பதே மூச்சாயிற்று! பட்டிதொட்டிகள் எங்கும் தங்கம்மா அலை! சமயத் துறையில் பெரும் விழிப்புணர்ச்சி! பேச்சுக் கலையில் தங்கம்மா பணி! மக்கள் மத்தியில் அவருக்கிருந்த மதிப்பினைப் பின்வரும் வாழ்த்துப் பாடல்களில் எதிரொலிக்கச் செய்தேன்:

சின்னமே எங்கள் வேண்டாம்
சிறுகளி யாட்டம் வேண்டாம்
வன்னவான் சிகரம் வேண்டாம்
வானவேடிக்கை வேண்டாம்
மன்னுபேர் தங்கம்மாவை வரவழைத்
திடுக என்பர்
இன்னதோர் மாற்றம் நேர எழுந்தனை
இனிது வாழி!

மருந்துவ நிபுண ருக்குப் பொறியியல்
வல்லு நர்க்குக்
குருத்தொழி வாளருக்குக் குறித்துயர்
படிப்புக் காண்பார்
சரித்திரம் இன்று மாறித் தங்கம்மா
வுட்குக் கற்க
வரித்தெழும் பலரைக் கண்டோம்
வளர்கலை வல்லி வாழி!

பொதுமக்கள் மத்தியில் தங்கம்மா அவர்களுக்குப் பெருமதிப்பு இருந்தமைக்குக் காரணம் அவரது பேச்சுவன்மை மட்டுமன்று. அவரது இன்முகம், அன்பு மொழிகள், எல்லோருடனும் இனிதாகப் பழகும் பண்பு, ஏற்றத்தாழ்வு பாராட்டாத பெருந் தன்மை என்பனவும் காரணங்களாகின்றன. மிகவும் முக்கியமாகச் சமயப் பணிகளில் அவர் நடைமுறைப்படுத்திய சமரசக் கொள்கைகள் சமயத்தினின்றும் மக்களைப் பிரித்து வைத்த கட்டுக்கோப்புகளை உடைத்தெறிந்தன.

இந்தவகையில் புரட்சி செய்த மற்றொரு சமயத் தொண்டர் ஆத்மஜோதி நா. முத்தையா அவர்கள் என்பதையும் இங்கு குறிப்பிடல் வேண்டும். இருவருமே சமூக நோய்களுக்கு சமய மருந்தை வெகு திறமாகப் பயன்படுத்திவந்த மருத்துவர்கள். தொண்டு நெறியே சைவநெறி என்பதனைக் காலத்துகேற்ற வகையிற் செய்து காட்டியவர்கள்.

தங்கம்மா அவர்களின் பெருமையை 'தங்கம்மா நான்மணிமாலை'யிலும் முத்தையா அவர்களின் தொண்டுகளை 'முத்தான தொண்டர்' என்ற நூலிலும் விளக்கும் வல்லமையை இறைவன் அடியேனுக்குத் தந்ததை எண்ணி வியந்து கசிகின்றேன்!

காரைக்கால் அம்மையாரைத் தொடர்ந்து பெண்கள் பலர் சமயத்தைப் பேணி வந்துள்ளனர். பாண்டிமாதேவியார், திலகவதியார், குந்தவை தேவியார் போன்றோர் முன்னணியில் நிற்பவர்கள். இவர்கள் வரிசையில் பல நூற்றாண்டுகளுக்குப்பின் ஈழத்திலே இன்று துர்க்காதுரந்தரியார். நாம் கொடுத்துவைத்தவர்கள்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோல் விலையேற்றம்?




பிரசண்ணா
இராதாகிருஷ்ணன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ ராம ஜெயம்

**நம்பிக்கை! நாணயம்!! அதிவேகம்!!!**
**மக்களின் நன்மதிப்பு!!!!**

# AGR

## MONEY TRANSFER

## துரித பணமாற்றுச்சேவை

- இலங்கை
- கொழும்பு
- நீர்கொழும்பு
- புத்தளம்
- வவுனியா
- மட்டக்களப்பு
- இந்தியா
- சென்னை
- திருச்சி
- மதுரை
- சிங்கப்பூர்

இவை மட்டுமல்ல

- ஜேர்மனி
- சுவிஸ்
- இங்கிலாந்து
- பிரான்ஸ்
- நோர்வே
- அவுஸ்திரேலியா

அனைத்து இடங்களுக்கும்

AGR

**எப்பொழுதும் உயர்ந்த பெறுமதி!**

**கனடாவின் முக்கிய நகரங்களிலிருந்து பணம் அனுப்ப ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.**

**அன்பான சேவை!**

**தொடர்புகளுக்கு:**
**எஸ். ஆறுமுகம்** B.A (Cey)

**2800 Eglinton Ave. East, Scarborough. ON**

கீதவாணி கலையக கட்டிடத்தில்
அறை இல: 203

**Tel: (416) 261 0024**
**Fax: (416) 261 9462**

வாடிக்கையாளர்களின் நன்மை கருதி மார்க்கம் பிறிமோட்டன் சந்திக்கருகாமையில் உள்ள சரவணாஸ் மார்க்கட்டிலும் பணம் அனுப்பவும் எடுக்கவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலந்தி

நிருஜா டென்னிஸ் விளையாடிவிட்டு உடை மாற்றிக்கொண்டு வந்த போது நிமால் யாருக்காகவோ வாசலில் காத்திருந்தான். அவனைக் கடந்து போகும்போது அவனைப் பார்த்துச் சிரித்துவிட்டு "பாய்!" சொன்னாள். அவனும் "பாய்" என்றான். அவள் தனது காரை எடுத்துக் கொண்டு வரும்போதும் அவன் அங்கேயே நின்றான். அவன் அவளது டென்னிஸ் மிக்ஸ்டபிள் பாட்னர். இளமை அவனிடம் நிறைய இருந்தது. புதிதாக வந்த அவளது ஆட்டத்தின் திறமையைக் கண்டு அவனாகவே வந்து தன்னோடு சேர்ந்து போட்டிகளில் ஆடமுடியுமா என்று கேட்டான். கடந்த சில ஆண்டுகளாக டென்னிஸ் விளையாட்டில் கொடி கட்டிப் பறப்பவன் நேரேவந்து கேட்டபோது அவள் மெய்மறந்து போனாள். ஆனந்த அதிர்ச்சியில் "ஆம்" என்று சொல்லக்கூட முடியாமல் தலையை மட்டும் ஆட்டினாள். இந்த இரண்டு வாரங்களாக அவனோடு சேர்ந்து தான் டென்னிஸ் பயிற்சி செய்கின்றாள். அவன் விலையுயர்ந்த நாகரீகமான உடை அணிவதும் பென்ஸ் காரில் வருவதும் அவளை அவனிடம் இருந்து வேறுபடுத்திக் காட்டுவதாக நினைத்தாள். நிமாலோடு சோடியாக விளையாடுவது தனக்குக்கிடைத்த பெரும் அதிஷ்டம் என்று நம்பினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதாரண ஒரு குடும்பத்தில் பிறந்ததால் அவளுக்குள் இப்படி ஒரு தாழ்வு மனப்பான்மை எப்பொழுதும் இருக்கும். அவளை அப்படி நினைக்க வைத்தது அவளது பொருளாதார நிலை. பிறந்த மண்ணில் பாடசாலை டென்னிஸ் போட்டி களில் பங்குபற்றி பரிசுகள் பல பெற்றவள். திருமணமாகி இங்கே வந்தபோது பல கனவுகளையும் சுமந்து வந்தாள். கணவ-னின் இரவுவேலையும், அதன்பின் பகுதி நேரவேலையும், அதுமுடிய பகலில் தூக் கமும் அவளைக் குடும்ப வாழ்க்கையில் விரக்தியடைய வைத்தது. எனவேதான் அந்த விரக்தியை விரட்ட பழையபடி டென்னிஸ் ஆடத் தொடங்கினாள். காரை அவனுக்கு அருகே நிறுத்தி,

"உங்களுக்கு லிப்ற் தரவா நிமால்?" என்று கேட்டாள். அவன் ஒரு நிமிடம் தயங்கினான். அவனது தயக்கத்தைப் புரிந்து கொண்டு...

"கம் ஐ வில் றொப்யூ" என்று சொல்லி கதவைத் திறந்து விட்டாள். "இவ்யூ டோன் மைன்ட்" என்று நிமால் கேட்டு விட்டு முன்சீற்றில் அமர்ந்து தனது வீட்டிற்கு போவதற்கு வழிகாட்டினான். தனது காரை நண்பன் எடுத்துச் சென்று விட்டதாகச் சொன்னான். இறங்கிப் போகும்போது "உள்ளே வந்துவிட்டுப் போங்களேன்" என்று அவள் இருந்த பக்கம் வந்து ஆர்வத்தோடு கேட்டான். அவன் உள்ளே தன்னை அழைப்பான் என்பதை எதிர்பார்க்காத அவள்,

"இல்லை வேறு ஒருநாளைக்கு வருகிறேன்" என்றாள்.

"சரி உங்க இஷ்டம்! உங்க பொன்னான பாதம் பட இந்த வீடு கொடுத்து வைக்க வில்லை அவ்வளவுதான்" அவன் முகம் சுருங்கியது. அவளுக்கோ என்னபதில் சொல்வது என்று தெரியாமல் அவனது வேண்டுகோளை மறுக்கவும் முடியாமல் சங்கடப்பட்டவள்,

"சரி வர்றேன்!" என்று அரைமனதோடு தலையை ஆட்டிவிட்டு காரைவிட்டு இறங்கி



அவனோடு உள்ளே போனாள்.

"வீட்டிலே யார் இருக்கிறாங்க?" என்று கேட்டுக் கொண்டே உள்ளே காலடி எடுத்து வைத்தாள்.

"மனைவி பிள்ளைகள்" என்றவன் "உட் காருங்க" என்று செற்றியைக் காட்டினான். செல்வச்செழிப்பு வீட்டிலே தெரிந்தது.

"எங்கே யாரையும் காணோம்"

"அவங்க பாடசாலை விடுமுறையாகையால் மியாமிக்குப் போயிருக்கிறாங்க" என்று சொல்லிவிட்டு

"வட் டுயூ லைக்கு காவ்" என்று கேட்டான். "இல்லை ஒன்றும் வேண்டாம்"

"நோ நோ ஏதாவது சாப்பிடுங்க, கோக் ஓ யூஸ்" என்று வற்புறுத்தினான்.

"எனித்திங்"

"எனித்திங்" அவன் விழிகளை உயர்த்தி ஒருமாதிரியாய்ப் பார்த்தான்.

அவள் வெட்கப்பட்டு தன்னைச் சமாளித் துக் கொண்டு "கோக்" என்றாள். ஐஸ் துண்டுகள் மிதக்க கோக் கொடுத்தான். அவள் அதை அருந்திக் கொண்டே "எத்தனை குழந்தைங்க" என்றாள்.

"ஒரு பையன் ஒரு பெண்! நாமிருவர் நமக்கிருவர்! இருங்க ஆல்பம் பாருங் களேன்" என்று ஆல்பத்தை எடுத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நிறுத்தீட்டிங்களா?" சட்டென்று சிரித்துக் கொண்டு கேட்டாள்.

"மனைவி சொல்லிட்டா இதுவே போது மென்று!"

உயரே இருந்த ஆல்பத்தை எட்டி எடுக்கும்போது அவனது கண்ணுக்குள் தூசி விழுந்தது. செற்றியில் உட்கார்ந்து கண்ணைக் கசக்கினான்.

"என்ன? என்னாச்சு உங்களுக்கு?" என்று கேட்டபடி அருகே வந்தாள் பதட்டத் தோடு. "கண்ணுக்குள் ஏதோ விழுந்து விட்டது" என்றான். "இருங்க" என்று சொல்லி இயல்பாக அவனருகே குனிந்து கண்இமைகளைத் திறந்து கண்ணுக்குள் ஊதிவிட்டாள். "இப்போ சரியா?" என்றாள். அவன் "இல்லை" என்று தலையாட்டினான். மீண்டும் கண்ணுக்குள் ஊதிவிட்டு "கண்ணைத் திறவுங்க" என்றாள். அவன் திறந்து பார்த்து விட்டு "ஐயாம் ஓகே" என்றான். அவளது ஸ்பரிசம் பட்ட இடமெல்லாம் அவனுக்கு நெருப்பாய்ச் சுட்டன. அவளது சூட்டுக் காற்றுக் கூட கண்ணுக்கு இதமா யிருந்தது.

ஆல்பம் பார்த்த அவளுக்கு ஏனோ ஒருவித பொறாமை அவனது மனைவி மேல் வந்தது. யாரோ ஒரு பெண்ணுக்கு இவ்வளவு அதிஷ்டமா? மியாமியை அவளால் நினைத்தும் பார்க்கமுடியாது. மியாமி வேண்டாம் இப்படி ஒரு வீடாவது? கற்பனை எங்கோ எல்லாம் பறந்து முடிவில் ஏக்கப் பெருமூச்சாய் வெளி வந்தது.

"என்னிடம் சில டென்னிஸ் டெமோ வீடியோ கசெட் இருக்கு, போட்டுக் காட்டிறேன் பார்க்கிறீங்களா?

"பார்க்க ஆசைதான் ஆனால் நேரம் போயிடிச்சு, வேறு ஒரு நாளைக்கு வந்து பார்க்கிறேனே!"அவள் விடைபெற்றபோது நிமால் அருகே வந்தான்.

"யூ லுக் சுவீற்" என்றவனது வார்த்தைகளில் மெய்மறந்து நின்றவளின் கன்னத்தில் சட்டென்று முத்தமொன்று கொடுத்து "பாய்" சொன்னான். இதை எதிர்பாராத அவள் மிரண்டுபோய் மருட்சி யுடன் அவனை மௌனமாய்ப் பார்த்தாள். விடைபெறும் போது முத்தம் கொடுத்துப் பிரிவதில் ஒன்றும் தப்பில்லை என்பது மட்டுமல்ல, இந்த நாட்டில் உள்ள எல்லாவற்றையும் ஏற்றுக் கொள்ளும் நாம், ஏன் அவர்களது கலாசாரத்தை மட்டும் ஏற்றுக்கொள்ள மறுக்கிறோம் என்றெல்லாம் கணவனோடு அவள் வாதாடுவதுண்டு. ஆனால் இப்போது அவளே அப்படி ஒரு சூழ்நிலைக்குள் தள்ளப்பட்ட போது ஒரு அன்னியனின் முத்தத்தால் அவளது நெஞ்சுக்குள் இனம் கண்டு கொள்ளமுடியாத பீதி பிடித்துக் கொண்டது. அந்த முத்தம் ஒரு சாதாரண முத்தமல்ல, வித்தியாசமானது என்பது அவளுக்குப் புரிந்தது. திடீரென பயமும் கவலையும் அவளை வாட்டத் தொடங்கின. என்ன இது? என்னுடைய பலவீனத்தை இவன் தனக்குச் சாதகமாய்ப் பயன் படுத்துகிறானோ? அதற்கு மேல் அங்கே நிற்க விருப்பமில்லாது அவசரமாய் வெளியேறினாள்.

தொடர்மாடிக் கட்டிடத்திற்கு வந்து காரை நிறுத்திவிட்டு உள்ளே போனாள். எலிவேற்றருக்குக் காத்திருந்து ஆறாவது மாடிக்குப் போய்க் கதவைத்திறந்து உள்ளே போனாள். கணவன் அடித்துப் போட்டது போலக் குறட்டைவிட்டுத் தூங்கிக் கொண்டிருந்தான். அவளுக்கு எரிச்சலாய் இருந்தது. ஏழுவயது மகள் மேசையில் உட்கார்ந்து ஏதோ எழுதிக் கொண்டிருந்தாள். அருகே போய்த் தலையைத் தடவிவிட்டாள்.

"சாப்பிட்டியா?"
"ஆமா, அப்பா போட்டுக் கொடுத்தார்"
"என்ன எழுதிறாய்?"
"புறஜெக்ற், ரீச்சர் ஸ்பைடரைப் பற்றிப் படம்கீறி எழுதிக் கொண்டு வரச் சொன்னா."
"எப்ப கொடுக்கணும்"
"அடுத்தகிழமை"
பாத்திரங்கள் கழுவி வைத்தாள். இரவு வேலைக்கு போவதற்கு கணவன் ஆயத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகிக் கொண்டிருந்தான். அவனுக்குச் சாப்பாடு பரிமாறி வேலைக்குக் கொண்டு போவதற்குக் கோப்பியும் போட்டு கொடுத்தாள். அந்த ஒற்றைப் படுக்கை யறை மாடிவீட்டில் தினமும் நடக்கும் சாதாரண நிகழ்ச்சிதான். ஆனாலும் இன்று ஏனோ அவளுக்கு 'இது என்ன வாழ்க்கை' என்ற எண்ணம் மனதில் எழுந்தது. இது எல்லாம் ஒரு அடிமைத் தனமான செய்கை போல இருந்தது. பணம் கொடுத்து மாப்பிள்ளை எடுத்து அவர்களுக்கு அடிமைத்தொழிலும் செய்யும் பெண்களின் அவலம் பற்றி சமீபத்தில் ஒரு பத்திரிகையில் வாசித்தது ஞாபகம் வந்தது. இவனைத் திருமணம் செய்ததில் என்ன சுகத்தைக் கண்டேன் என்ற எண்ணம் கொஞ்சநாட்களாக அவள் மனதை அரித்துக் கொண்டேயிருந்தது. உளரீதியாக மட்டுமல்ல, உடல்ரீதியாகவும் அவளை அவன் இதுவரை திருப்திப் படுத்தியதில்லை. திருமணமான புதிதில் 'ஆசை அறுபதுநாள் மோகம் முப்பது நாள்' என்ற கணக்கில் தான் வாழ்க்கையே ஆரம்பித்தது. குழந்தை பிறந்தபின் அது கூடக் கிடைக்கவில்லை. அதன்பின் அவள் முழுமையாக எந்தவொரு இன்பத்தையும் கணவனிடம் இருந்து அனுபவிக்கவில்லை. சில நாட்களின் முன் வெட்கத்தை மறந்து கணவனிடம் பட்டும் படாமலும் வாய் விட்டுக்கூடச் சொல்லிப் பார்த்தாள். "சும்மா இருந்து திண்டு போட்டு உடம்பு திமிர் எடுக்குதோ?" ஒரே வார்த்தையில் அவன் அவளது வாயை மூடிவிட்டான்.

பக்கத்து அப்பாட்மென்ற் ஆன்ரி கவுன் சிலிங்குக்குப் போவதுண்டு. "உன்பிரச்சனை என்னவென்று எனக்குப் புரியுது. பயப்ப டாமல் என்கிட்ட சொல்லலாம்" என்பது போல அவரது பார்வை நம்பிக்கை ஊட்ட ஒரு நாள் தனது நிலைமையை எடுத்துச் சொல்லி ஆலோசனை கேட்டாள்,

"என்னைப் பொறுத்தவரை கணவனுக்கு ஏற்ற மனைவியாய் அனுசரித்துப் போவது தான் ஒரு குடும்பப் பெண்ணுக்கு நல்லது. நான் அதைத்தான் செய்கிறேன்! அதைத்தான் செய்வேன்! ஆனால் இந்த நாட்டிலே பெண்களுக்கு எல்லாச் சுதந்திரமும் இருக்கிறது. அந்த நாட்டிலே அன்று எங்களுக்கு இல்லாத சுதந்திரம் இன்று இந்த நாட்டிலே உங்களுக்குக் கிடைத்திருக்கிறது. ஆகவே உன்னுடைய விருப்பத்தை யாரும் தடுக்க முடியாது. உன் இஷ்டத்திற்கு நீ எதுவும் செய்யலாம். அதைத் தடுத்து நிறுத்த உன் கணவனுக் குக் கூட உரிமையில்லை!

"இந்த நாட்டில் நீ எதுவும் செய்யலாம்" என்று ஆன்ரி சொன்னது அவளுக்குள் ஒருவித உற்சாக ஊற்றை ஏற்படுத்தியது. அன்று இரவு முழுவதும் தூக்கம் வராமல் சங்கடப்பட்டாள். ஒரு பெண்ணின் உணர்ச்சிகளைக் கணவனால் ஏன் புரிந்து கொள்ள முடியவில்லை? கண்களில் ஈரம் படர்ந்தது. இப்போதெல்லாம் அடிக்கடி அவர்களுக்குள் சின்னச் சின்ன விடயத்திற் கெல்லாம் வாக்குவாதம் ஏற்பட்டது. ஒருசிலர் உறவு என்று சொல்லிக் கொண்டு எரியிற நெருப்பில் எண்ணெய் ஊற்றிக் கொண்டிருந்தார்கள்.

"என்னை எதுக்குக் கலியாணம் செய்தீங்க?"

"என்ன இது நீயும் விரும்பித்தானே கழுத்தை நீட்டினாய்"

"இப்படி ஒரு வாழ்க்கை அமையும் என்று தெரிந்திருந்தால் நிச்சயமாய் சம்மதித் திருக்க மாட்டேன். எனக்கு எல்லாமே அலுத்துப் போச்சு"

'எப்படி ஒரு வாழ்க்கை? இப்ப உனக்கு என்ன குறை?"

"'செல்வாக்காய் இருப்பது போல நடிச்சு நீங்க என்னை ஏமாத்திட்டீங்க. யாருக்கு வேணும் இப்படி ஒரு பிச்சைக்கார வாழ்க்கை?"

"'ஏன் உனக்கு என்னைப் பிடிக்கலையா?"

"'பிடிக்கிறத்திற்கு என்னயிருக்கு? வீடிருக்கா, காசிருக்கா? எதைப்பிடிக்கணும்? இந்தத் தூங்கு மூஞ்சியையா?"

காலையில் எழுந்திருக்க மனம் வரவில்லை. மனசு வெந்து உடம்பு லேசாச் சுட்டது. நேற்றைய நினைவு மனசுக்குள் அரித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன துணிச்சல் அவனுக்கு? முத்தம் கொடுக்க எப்படி அவனுக்கு தைரியம் வந்தது? எல்லையை மீறி அவனுக்கு இடம் கொடுத்து விட்டேனோ? இனிமேல் வேண்டாம் இந்தத் தொடர்பு. நான் நல்ல மனைவியாய் இருக்க வேண்டும்! மனதைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

அன்று டென்னிஸ் பயிற்சிக்கு அவள் போகவில்லை. மகளுக்கு ஸ்பைடர் பற்றிப் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

**"பெண்சிலந்திகளே அனேகமாக வலை பின்னுகின்றன.**

**தாங்கள் விரித்த வலையில் அவை மாட்டிக்கொள்வதில்லை. ஆனால் அவை விரித்த வலைப்பொறியில் இரைகள் இலகுவில் மாட்டிக் கொள்கின்றன."**

தொலைபேசி அலறியது. எடுத்து 'ஹலோ' என்றாள். யாரை வெட்டிவிட நினைத்தாளோ அவனே மறுபக்கத்தில்!
"நிமால்!"
"சொறி இன்றைக்கு....... என்னாலே பயிற்சிக்கு வரமுடியாது"
"ஏன்?"
என்ன பதில் சொல்வது? ஏதாவது சொல்லியாக வேண்டுமே!
"வந்து..... கார் பழுதாய்ப் போய்ச்சு!"
தட்டுத் தடுமாறிச் சொன்னாள்.
"பரவாயில்லை நான் வந்து கூட்டிக் கொண்டு போகிறேன்."
"இல்லை வேண்டாம்!"
"ரெடியாய் இருங்கோ, அரைமணித்தியாலத்தில் அங்கே நிற்பேன்"
"வேண்டாம்!" அவசரமாய் மறுத்தபோது தொடர்பு துண்டிக்கப்பட்டது.

இவன் என்ன என்னை வெருட்டுறான்? கலவரத்துடன் உள்ளே எட்டிப் பார்த்தாள். கணவன் தூங்கிக் கொண்டிருந்தான். கோபம் கோபமாய் வந்தது. இவன் யார் என்னைக் கட்டாயப்படுத்த? கொஞ்சம் இடம் கொடுத்தால் 'அட்வான்டேச்' எடுக்கிறான். அவன் முத்தம் கொடுத்த போது நான் மௌனமாய் இருந்தது தப்போ? என்னைப்பற்றி இவன் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறான்? வரட்டும்! இன்றைக்கு அவனுக்கு நல்லாய்க் குடுக்கவேணும்!

ஃபானை வேகமாகப் போட்டுவிட்டு கட்டிலில் விழுந்தாள். அவன் என்னதான் சொன்னாலும் நான் இனிமேல் டென்னிஸ் விளையாடப் போகப்போவதில்லை. பல்லைக் கடித்துக் கொண்டு கோபத்தைத் தணித்தாள். திடீரென அவளுக்குப் பயம் பிடித்துக் கொண்டது. அவன் மேலே தேடி வந்துவிடுவானோ என்ற பயத்தில் பரபரப்புடன் அவளே கீழே இறங்கிச் சென்றாள். அவன் பென்ஸ் காரை அருகே கொண்டு வந்து நிறுத்தி கதவைத்திறந்து விட்டான்.

"இல்லை! நான் வரவில்லை! நீங்கள் போங்கோ!"
"ஏன்?"
"ஏனோ நான் வரவில்லை!"
"சனிக்கிழமை மாட்ச் இருக்கு! பயிற்சி எடுக்காமல் எப்படி வெல்வது?"
அவன் குரலை உயர்த்திக் கண்டிப்போடு சொன்னான். அவள் மனமில்லாமல் முன் ஆசனத்தில் ஏறி அமர்ந்தாள். அவன் ஒன்றும் பேசாமல் பயிற்சி முகாமை நோக்கிக் காரைச் செலுத்தினான்.
அவள் திடீரென்று அவனைப் பார்த்து,
"உங்க மனைவி வந்திட்டாங்களா?" என்றாள்.
"இல்லை!"
"இன்றைக்கு........... கட்டாயம் பயிற்சி எடுக்கணுமா?"
"ஏன் உங்களுக்கு வசதியில்லையா? ஆர் யூ நாட்......ஃபீலிங் வெல்?"
அவனைப் பார்த்து தலையாட்டினாள். ஆம் என்கிறாளா இல்லையா என்பது அவனுக்குப் புரியவில்லை.
"ஐயாம் சொறி, பரவாயில்லை! அப்போ நாளைக்கு நாங்க பயிற்சி எடுக்கலாம்! நான் உங்களை உங்க வீட்டிலேயே விட்டு விடுறேன்." நிமால் காரைத் திருப்பினான்.
"நிறுத்துங்க.... வேண்டாம்" என்றாள் அவசரமாக;
"ஏன்?"
"இல்லை வேண்டாம்! உங்க வீட்டிற்கே போகலாம்! என்றாள் நிதானமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடா
# சிங்கப்பூர் நகைமாளிகை ஆதரவில் தங்கச் சங்கிலி பரிசு பெறும்
கனடா ரோஜாவின்
# சிறுகதைப் போட்டி

பொது நிபந்தனைகள்:

- அகில உலக ரீதியில் தமிழ் பேசும் எழுத்தாளர்கள் இப் போட்டியில் பங்குபற்றலாம்.
- போட்டிகளுக்கு அனுப்பும் சிறுகதையின் உருவம், பொருள், அளவு ஆகியவை தொடர்பாக எந்தவித கட்டுப்பாடுகளும் இல்லை. படைப்பாளிகள் தாங்கள் விரும்பிய தலைப்புகளில் ஆக்கங்களை அனுப்பலாம். தமிழ் மக்களின் புலம்பெயர்வு, விடுதலைப் போராட்டம் ஆகியவை தொடர்பான சிறுகதைகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்படும்.

போட்டி முடிவு திகதி

- ஜுன் 30, 2000.
  இத் திகதிக்குப் பின்னர் வந்து சேரும் ஆக்கங்கள் போட்டியில் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டாது.
- சிறுகதைகள் தாளின் ஒருபக்கத்தில் மாத்திரம் எழுதியோ அன்றி தட்டச்சு செய்யப்பட்டோ அனுப்பலாம். எத்தனை பக்கங்கள் வேண்டுமானாலும் எழுதலாம்.
- போட்டியாளர்கள் தங்கள் படைப்புகளோடு தங்கள் பெயர், விலாசம், தொலைபேசி இலக்கத்தையும் தவறாமல் குறிப்பிட வேண்டும்.
- போட்டிக்கு அனுப்பிய சிறுகதைகள் தங்கள் சொந்தப் படைப்பு என்பதையும் இதுவரை வேறு எந்தப் பத்திரிகையிலும் பிரசுரமாகவில்லை என்பதையும் வேறு பத்திரிகைகளுக்கு பிரசுரிக்க அனுப்பிவைக்கப் படவில்லை என்பதையும் உறுதி செய்ய வேண்டும்.
- போட்டிக்கு வந்த கதைகள் திருப்பி அனுப்பப்படமாட்டாது. எனவே பிரதி வைத்துக்கொண்டு அனுப்பவும்.

முதற் பரிசு:

## தங்கச் சங்கிலி

2ம் 3ம் பரிசுகள்:

## தங்க மோதிரங்கள்

ஐந்து ஆறுதல் பரிசுகள்:

## பரிசுக் கூப்பன்கள்

அனுப்பவேண்டிய முகவரி:
'Rojah Publication'
F.P.P.O., P.O.BOX 45516,
747 Donmills Road,
North York, ON.
Canada. M3C 3S4

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

TAJ
LANKA
CATERERS

ராஜ் லங்கா கேற்றர்ஸ்

**Take-out & Catering**

**Vegetarian or Non Vegetarian**

*Small or Big Functions Catered for Full Catering & Banquet Service.*

சுவைமிக்க உணவுகளுக்கும்
பிறந்தநாள், திருமணம்
போன்ற அனைத்து
வைபவங்களுக்கும்
மண்டப வசதிகளுக்கும்
முதல் தெரிவாகட்டும்



**Mohamed Ansar**

1071 Danforth Rd., Unit 6, Scarborough, ON., Canada

Bus.: (416) 267-6060 Cel: (416) 456-4450

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பும் அன்பளிப்பும்

ஒருவருக்கு gift கொடுப்பதன் உண்மையான நோக்கம் என்ன? அன்பு தானே.

அதனைப் பெறுவதற்காக, நீடிப்பதற்காக அல்லது வலுப்படுத்துவதற்காக மனமுவந்து கொடுப்பதற்குப் பெயர்தான் gift.

ஆனால் இங்கே இருக்கும் சில நிலமைகள் வேறுபட்டதாக இருக்கிறது. யாராவது gift தந்துவிட்டால் "இது எவ்வளவு இருக்கும்" என்று கணப்பொழுதில் கணக்கிட்டு விடுவோம். அதன் பெறுமதிக்கு ஏற்றவாறே அவரையும் அளவிட்டுக் கொள்வோம்.

இது யதார்த்தம்.

ஆனால் gift தருபவரின் உண்மையான எதிர்பார்ப்பை புரிந்து கொள்ளாமல் அந்த giftஐ விலை மதிப்பிடுவது அவரது உறவுக்கு ஐந்தோ பத்தோ கொடுப்பதாகவே அர்த்தப்படும் இல்லையா?

"என்னப்பா.... ஏற்கனவே 5 மணிக்கூடு இருக்கு இது ஆறாவது" என்று அங்கலாய்க்கும் பலர் எம்மிடையே தான் இருக்கிறார்கள்.

"சே.. இந்த ரோசாப்பூவிற்குப் பதிலாக ஒரு Horlicks கொண்டு வந்திருக்கலாமே" என்று முணுமுணுத்தவர்களும் எம்மிடையே தான் இருக்கிறார்கள்.

எது எப்படி இருந்தாலென்ன?

மனிதர்கள் தமது அன்பை ஒருத்தருக்கு ஒருத்தர் வெளிப்படுத்தவதற்காகவே giftஐ பரிமாறுகின்றார்கள். அது என்னவாக இருக்கட்டும் அதை ஏற்றுக் கொள்வதே மனித இயல்பு. அத்துடன் gift என்பது ஒரு பெறுமதி கூடிய பொருளாக மட்டும்தான் இருக்க வேண்டிய அவசியமில்லை. அது ஒரு சிறு துரும்பாக கூட இருக்கலாம்.

சிறுகல்லை மட்டுமல்ல எழுதாத பேனாவைக் கூட அற்புதப் பொருட்களாக வைத்திருக்கும் மனிதர்கள் கூட எம் மத்தியில் இருக்கிறார்கள்.

gift ஆக கிடைத்த ஒரு சிறு ஓவியகீறலை தமது வரவேற்பறையில் அழகுபடுத்தி உறவை அர்த்தப்படுத்திய மனிதர்களும் இருக்கிறார்கள்.

இவர்களைப்போல நாமும் எமக்கு கிடைக்கும் பரிசுப் பொருட்களுக்கு மதிப்பளித்து அவர்களது அன்பை மேலும் வலுப்படுத்துவோம்.

பரிசுப் பொருட்களின் பெறுமதி
உறவை அளவிடுவதில்லை!

• *செல்லையா ராஜ்மோகன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கலிலியோ'டு இணைந்து 'காசினி'யும் விண்வெளி ஆய்வு






*Image Title:*
**True Color of Jupiter's Great Red Spot**

*Target Name:*
**Jupiter**
*Is a satellite of:*
**Sol (our Sun)**
*Mission:*
**Galileo**
*Spacecraft/ Mission:*
**Galileo Orbiter Imaging**
*Produced By:*
**Cornell University**
*Creation Date:*
**1996-08-22**

கடந்த நான்கு வருடங்களாக குரு (Jupiter) கிரகத்தில் ஆய்வுகளை நடத்தி வரும் 'கலிலியோ' (Galileo) என்ற விண்வெளி கலத்துடன், 'காசினி' (Cassini) என்னும் விண்கலம் இணைந்து விண்வெளி ஆய்வை தொடரவுள்ளதாக அமெரிக்க விண்வெளி ஆராய்வு நிலையம் நாசா அறிவித்துள்ளது.

"இவ்விரு விண்கலங்களில் ஒன்று குரு கிரகத்தின் காந்த வியல் மூடுபடலத்துக்குள்ளும் மற்றையது மூடு படலத்துக்கு வெளியேயும் நிலை கொள்ளும்; இக் கிரகத்தின் சூழலில் காற்று வேக மாற்றங்கள், காந்தவியல் தன்மைகள் என்பவற்றை அவ தானிப்பதற்கு இவ் விண்கலங்கள் உதவும்" என கலிபோர்னியா மாநிலத்தில் அமைந்துள்ள ஜெற் உந்து விசை ஆய்வு கூடத்தின் விண்வெளி ஆராய்வு விஞ்ஞானி டெனிஸ் மாற்சன் தெரிவித்தார்.

'கலிலியோ' 1989ம் ஆண்டில் ஏவப்பட்டு 1995ம் ஆண்டில் குரு கிரகத்தை சென்றடைந்தது. அதைத் தொடர்ந்து 1997ம் ஆண்டு ஏவப்பட்ட 'காசினி' இந்தாண்டு டிசம்பர் மாதத்தில் குரு கிரகத்துக்கருகே சென்றடையும் எனவும் அதன் பின்னர் அக் கிரகத்தின் புவியீர்ப்பு விசையினால் 'காசினி' சனி (Saturn) கிரகத்தை நோக்கி செலுத்தப்படும் எனவும் நாசா அறிவித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சீனாவின் அச்சுறுத்தலை எதிர்நோக்கும் தாய்வான்

- எஸ். ஆர். ராஜபாலன்
B.Sc (Hons) Dip-in-Accounting
கீதவாணி கனடிய உலக செய்திப் பொறுப்பளர்

சீனா என அழைக்கப்படும் மக்கள் சீன குடியரசிற்கும், தாய்வான் என அழைக்கப்படும் சீனக் குடியரசிற்கும் இரு நாடுகள் என்ற அடிப்படையில் விசேட தொடர்பு உண்டு" எனத் தாய்வான் நாட்டின் அதிபர் லீரெங்-கியூய் (lee teng-hui) கடந்த வருடம் கூறியதன் காரணமாக, தாய்வான் சீனாவில் இருந்து தனியான ஓர் சுதந்திர நாடு என அவர் மறைமுகமாக பிரகடனம் செய்துள்ளார்.

இதே சமயம் கடந்த வருடம் தெற்குச் சீனாவில் இருந்து நடத்தப்பட்ட ஏவுகணைப் பரிசோதனை, தாய்வானை அச்சுறுத்தும் ஓர் செயல்பாடாக அமைந்துள்ளது. இவ்வாறான நிகழ்வுகளால் சீனாவிற்கும், தாய்வானிற்கும் இடையில் ஏற்கனவே முறுகல் நிலையில் இருந்து வரும் அரசியல் தொடர்பு சமீபகாலத்தில் மேலும் கடுமையானதாக மாறி வந்துள்ளது.

இதற்கிடையில் தாய்வான் கம்யூனிச ஆட்சிக்குத் திரும்புவதை தாமதம் செய்தால் அல்லது தனிநாடாக பிரகடனம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும் முயற்சியில் இறங்கினால் சீனா கடும் நடவடிக்கை எடுக்கும் என இவ் வருடம், பெப்ரவரி மாதம் சீனா அதிபரும், பிரதமரும் கூறியுள்ளது. அந்தப் பிராந்தி யத்தில் மேலும் பதட்டமான நிலையை ஏற்படுத்தியது.

இந்த சூழ்நிலையில் தாய்வானில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்ற வேளையில் சீனா அச்சுறுத்தல்களை விடுத்தமை தேர்தலில் பங்கு பற்றும் வேட்பாளர்களுக்கு விடுக்கப்பட்ட மிரட்ட லாகவே கருதப்பட்டது. ஆனால் அதனை முற்றாகவே அலட்சியம் செய்த மக்கள் சீன அரசிற்கு எதிரான போக்கு டைய வரான சென் சீயூ பேன் என்பவரை புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்தமை தாய்வான் பிரஜைகள் சீனாவில் இருந்து வேறுபட்டு தனித்துவமான இயல்புடைய வர்கள் என்பதனை நிருபித்துள்ளது.




தாய்வான் தனது நாட்டின் ஒரு பகுதியென சீனா தொடர்ந்து உரிமை கோரி வருகின்ற போதும், தனித்துவமான ஜனநாயகக் கோட்பாட்டில் வழிநடத்தப் படும் நாடு என தாய்வான் வலியுறுத்தி சீனாவின் கோரிக்கைக்கு வளைந்து கொடுக்க மறுத்து வருகிறது. சமீபத்திய

## அரசியல் கண்ணோட்டம்

ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் இதனை தெளிவாக உறுதிப் படுத்தியுள்ளன.

### தாய்வான் நாடு உருவாகியதன் பின்னனி என்ன?

கிறிஸ்துவிற்குப் பின் 500ம் ஆண்டள வில் தாய்வானில் சீனர்களின் குடிவரவு ஆரம்பித்தது. அதன்பின் பல நூற்றாண்டு களின் பின்னர் வர்த்தக உறவுக்கான கேந்திர நிலையம் ஒன்றை அமைக்கும் முகமாக டச்சுத் தேசத்தின் வர்த்தகர்கள் 1624ம் ஆண்டில் தாய்வான் தீவை தம் முடையதாக்கினர். அதன் பின்னர் 1683ம் ஆண்டு முதல் 1895ம் ஆண்டு வரை சீனாவின் மஞ்சு பேரரசின் ஆட்சியின் கீழ் இருந்து வந்த தாய்வான், முதலாம் உலக மகா யுத்தத்தின் பின்பு யப்பானின் ஆதிக்கத்திற்கு உட்பட்டது. எனினும் 2 வது உலக யுத்தத்தின்பின் இத்தீவு மீண்டும் சீனாவிடம் கையளிக்கப்பட்டது.

1949ம் ஆண்டில் சீனாவில் தேசியப் படைகளுக்கும், சீன அதிபர் மாசே துங்கின் கம்யூனிஸ்ட் படைகளுக்கும் இடையில் உள்நாட்டுக் கலவரம் வெடித் தபோது, கம்யூனிஸ்ட் படைகள் வெற்றி பெற்றன. இதனைத் தொடர்ந்து தேசியப் படைத்தலைவர் சியாங் கேய்-சாக் (Chiang kai-shek) தாய்வானுக்குத் தப்பியோடி தய்ப்பே (Taipei) யை சீனாவின் தலைநகரமாக பிரகடனப்படுத்தினார். அதனைத் தொடர்ந்து தாய்வான், சீனாவைப் பிரதிநிதித்துவம் செய்யும் தகைமையுடைய தாக ஐக்கிய நாடுகள் சபையில் அங்கீகாரம் பெற்றது.

### உலக அரங்கில் சீனா எவ்வாறு மீண்டும் முக்கியத்துவம் பெற்றது?

அடுத்த இதழில் தொடரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

பத்தாவது ஆண்டில்
**TENTH YEAR**

பிரதம ஆசிரியர்:
திரு எஸ். திருச்செல்வம்
*அதிசிறந்த பத்திரிகையாளர் விருதினை கனடாவில் 1998இல் பெற்றவர்*

Editor in Chief:
THIRU S. THIRUCHELVAM
*Canadian Award Winning Journalist for outstanding Journalism-1998*

P. O. Box - 3, Station 'F', Toronto, Ontario, M4Y 2L4, Canada.
Tel: 416 920-9250 Fax: 416 921-6576 Editor: 416 757-9969 ext 211



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சைக் கீறி ஒரு நிறம்

- கவிஞர் இன்குலாப்

ஏதோ ஒரு திரையில்
நிறம் மறந்த நிகழ்வுகள்

தெரியவில்லை
எப்படி அழகாக ஒரு கனவு
காண்பது என்பது.

பாறைகளுக்கு அடியில்
மௌனமாய் ஊறும்
சுனையைப் போல

இமைகளுக்குள்ளே
இருளைத் துடைத்தும்
துடைக்காமலும்
மறந்து போன பொம்மைகள்
எல்லாம்

அசைந்து அசைந்து
வருகின்றன.

நினைவின் கண்ணிகளில்
சிக்கிய
நேற்றின் கனவுகளை
மனத்திரையில் பொருத்தி
அவ்வவற்றின்
வண்ணங்கள் புனைந்தேன்

மணங்கொண்டு
மலர்களை
மறுபடி மலர்த்தினேன்

மலைகள் எழுந்தன
பூமி கனக்க.
இன்னும் உயரமாய்
வானம்.
குயில்
தனது சுருதிகளோடு

அந்தத்திரையின்
மறுபுறம்

எங்கிருந்தோ பாய்ந்த
ஈயரவைகளில்...
வெட்ட வெளியில்
தலைகளை நிமிர்த்திய
புல்லும் பூவும்
சிந்திய துளிகளின்
நிறங்களை எழுத
என்
நெஞ்சைக் கீறினேன்.

நுரைகள் சிவந்த
அலைகளின் உப்பை
நினைத்துக் கொண்டேன்
கண்ணீர்த் துளிகளால்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துளி 1

**இ**ருண்ட குகைக்குள்ளிருந்து ஒளி மெல்ல மெல்லப் படர்ந்து பரவி முன்னேறி தண்டவாளங்களை நனைக்கிறது. அடுத்த நொடியில் ஒளிப் பிரவாகமும் பேரிரைச்சலுமாக பாய்ந்து வந்து நின்றது புகையிரதம்.

தோள்பையைச் சரிசெய்துகொண்டு புகையிரதத்தில் ஏற ஆயத்தமானேன். புகையிரதம் பலரை உதிர்த்துவிட்டு என்னையும் வேறு சிலரையும் விழுங்கிக் கொண்டு மறுபடி வேகமெடுத்தது. மனிதர்களைப் போல முணுமுணுக்காமல், களைப்பில்லாமல் பயணத்தைத் தொடர்ந்தது.

நான் ஏறியிருந்த பெட்டியில் அத்தனை கூட்டமில்லை. வழக்கம்போல அந்த முகங்களை அவர்களறியாதவாறு வாசித்தேன். எத்தனை விதமான முகங்கள்... நின்றபடியே உறங்கி வழிந்து கொண்டும், புத்தகங்களையும் மனிதர்களையும் வாசித்துக் கொண்டும், உரத்து விவாதித்துக்கொண்டும்... வெள்ளையாய், மஞ்சளாய், கறுப்பாய், உயரமாய், குள்ளமாய், மீசையோடும், மழித்த நீலநரம்புகள் தெரியும் கன்னங்களுமாய்... எத்தனை விதமாய்... மனிதர்கள்! மனிதர்கள்! தோற்றத்தில் மட்டுமல்லாது குணங்களாலும் வேறுபட்ட மனிதர்கள்.

"சொல்லட்டுமா?" என்றது மானசி.

என்ன இது தனியாய்தானே புகையிரதத்தில் தொற்றிக்கொண்டாள்..... யாரது மானசி என்று நீங்கள் புருவம் உயர்த்துவது எனக்குத் தெரிகிறது. மானசியை உங்களுக்கு அறிமுகப்படுத்தாது போனால் அந்தப் பாவத்தை நான் எந்த கங்கையில் மூழ்கித் தொலைப்பது? (கங்கையில் மூழ்கினால் பாவம் தொலையுமா என்பது குறித்து இப்போது விசாரம் கொள்ள வேண்டாம். கதையைக் கவனியுங்கள்)

மானசி என்பது என்னுடைய மனசிற்குள்ளிருந்து ஓயாமல் என்னைத் தொந்தரவு செய்யும் குரலின் பெயர். (வடமொழிப் பெயர் போல இருக்கிறதே என்று முகம் சுளிக்கிற பெரியவர்கள் மன்னிக்கவும்) இப்போதெல்லாம் அதனுடைய தொந்தரவு அதிகமாகிவிட்டது. சளசளவென்று பேசிக்கொண்டே இருக்கிறது. முணுமுணுக்கும்போது அதுவாகவும் சமாதானம் சொல்கிறபோது இதுவாகவும் எதிரெதிரே உட்கார்ந்து இரண்டு குரலில் பேசுகிறது. பேசாதிரு என அதட்டினால் சொற்ப நேரம் மௌனமாகி மறுபடியும் சளசளக்க ஆரம்பித்துவிடுகிறது. இதில் வேடிக்கை என்னவென்றால் கவிதை போல எதுவோ ஒன்றை முயன்றுபார்க்கிறது. அழுகையோ ஆனந்தமோ உரைநடையோடு கோபித்துக் கொண்டுபோய் கவிதையைக் கட்டிக்கொள்கிறது. மானசி சொல்வதைக் கவிதை என்று ஏற்றுக்கொள்வதும் விடுவதும் உங்கள் பொறுப்பு. நான் ஒன்றும் காக்கைக்குஞ்சு பொன்குஞ்சு என்று வரிந்துகட்டிக் கொண்டு வரப்போவதில்லை. மானசிபால் எனக்கு நிறையவே இரக்கம் உண்டு. ஏனென்று நீங்களே பின்பு உணர்ந்து கொள்வீர்கள்.

அது, அந்த மானசி புகையிரதத்தில் ஏறியதுமே என்னை நச்சரிக்கத் தொடங்கி விட்டது. என்னவென்று கேட்கலாமா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்கதை

# ஞாபகங்கள் மழையாகும்...



"என்ன சாமி இவன்"
என்றொருவன் பரிகசித்தான்.
பூமியிலே வந்து விழுந்தபின்னால்
கோடிப் பிரிவினைகள்
கொள்வான் மனிதன் எனத் தெரியாதா?
பின்னும் ஏன்
தோற்றத்தில்
தோல் நிறத்தில்
உயரத்தில்
மாறுபட்ட படைப்புகளாய்
மண்ணுக்கு அனுப்புகிறான்?

கலைவாணி இராஜகுமாரன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டீர்களா...? இதை நான் என்ன செய்வதாம்? கடந்தவாரம் ஹைகூ போல ஒன்றையும் முயன்றுபார்த்தது. என்ன செய்வது? என்னுடைய தலையெழுத்து அதைக் கேட்பது உங்களுடைய கேடு காலம் அதை வாசிப்பது. எதற்கெல்லாம் இரங்குவதென்று இல்லையா என இதை வாசித்தபின் நீங்கள் நினைக்கக்கூடும்.

**பனிக்கால மரங்களுக்குள்**
**சிறைப்பட்ட கனவுகள்...**
**பாவம் அந்தத்தளிர்கள்!**

என்னுடைய சக குடித்தனக்காரி வானதிக்கு மானசிமேல் ஒரு பிடிப்பு. இல்லையென்றால் தினம் வேலைக்குப் போய் வந்து ஒரு புத்தகத்தோடு உட்கார்ந்துவிடுகிற, அடிக்கடி வானத்திற்குள் விழிகளைத் தொலைத்துவிடுகிற, அதிகம் பேசாத, இரகசியங்களைப் பகிர்ந்துகொள்ளாத, நிறைய சுயகௌரவம் பார்க்கிற ஒருத்தியோடு ஒரே அறைக்குள் வாழ்ந்துகொண்டு முரண்படாதிருப்பது சிரமம்.



புகையிரதம் யாரோ இழுத்துப்பிடித்தாற்போல தடக்கென்று நின்று, உதிர்த்து விழுங்கிப் புறப்பட்டது.

“பால் முடிஞ்சுது... வரேக்கை மறந்திடாம வாங்கிக்கொண்டு வா” வானதியின் குரல் நினைவூட்டியது.

அத்தோடுகூட சலவைத்தூளும் வாங்க வேண்டும். சனி - ஞாயிற்றுக்கிழமைகள் துவைப்பதிலும், துப்பரவாக்குவதிலும் கழிந்துபோய்விடும். சிலசமயம் வானதியும் நானும் சினிமாவிற்குப் போவோம். வானதி சினிமாவோடு ஒன்றிப்போய் உட்கார்ந்திருப்பாள். அதில் வரும் கதாநாயகியாகத் தன்னைக் கற்பித்துக்கொண்டு காதல் சோகத்தில் கரைவாள். அவளுக்கும் ஒரு இறந்தகாலமும் அவள் இறந்த காலமும் இருந்தன. காதல் குறித்தும் திருமணம் குறித்தும் நிறைய கற்பனைகளை வளர்த்து வைத்துக்கொண்டு அவஸ்தைப் பட்டுத் தெளிந்தவள். ஆனால்...

**காதல் என்பது புனிதமானது என்று கொண்டாடுவதற்கொன்றும் குறைவில்லை.**

கவிஞர் வைரமுத்துவின் வரிகளில் சொல்வதானால்:

**பூமியின் சுழலசுக்கு - எண்ணெய்**
**போட்டு விடுவதெல்லாம்**
**சாமியால் ஆவதில்லை - காதல்**
**சக்தியால் ஆவதுண்டு.**


என்பதே அவள் காதல் பற்றி வரித்துக்கொண்ட கருத்து.. என்னை அந்த வரிகள் ஒன்றும் கரைத்து விடவில்லை. காதல் இல்லையென்றால் பூமி சுழலாதாமே...? சிரிப்புப் பொங்கிவரும். சும்மாவே கேலி பேசும் மானசி வாயை மூடிக்கொண்டிருக்குமோ? கெக்கலி கொட்டியபடி தொடங்கி விடும்.

**காதல் என்பது...**
**சொற்ப நேரம்**
**வாழ்க்கை வானத்தில்**
**வந்துபோகும் வானவில்!**
**விழித்தவுடன் மறந்துபோகும் கனவு!**
**காதல் என்பது...**
**திருமணத்தின் பின்னான**
**பொய்களுக் கெல்லாம்**
முகவுரை!

ஏன் மானசி இப்படிச் சலித்துக் கொள்கிறதென்று அறிவதற்கு நீங்கள் கொஞ்சம் காத்திருக்கவேண்டும்.

(வளரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அனுராதா ஸ்ரீராம்

*- ஓர் இளம் திரை இசைப் புயல்*

பல்வேறு வகைப்பட்ட பாணிகளில் பாடக்கூடிய திறமை வாய்ந்தவரும் இசைத் துறையில் பல்வேறு சாதனைகளைப் படைத்தவருமான அனுராதா ஸ்ரீராம் (வேகமாக வளர்ச்சி அடைந்து வரும்) ஒரு சிறந்த திரை இசைப் பாடகி.

பத்மஸ்ரீ தஞ்சாவூர் சிறீ எஸ். கல்யாணராமன், சங்கீத கலாநிதி சிறிமதி ரி. பிறிந்தா, டாக்டர். ரி. விஸ்வநாதன் ஆகியோரிடம் கர்நாடக சங்கீதப் பயிற்சி பெற்றுள்ளதுடன், இவர் இந்துஸ்தானி சாஸ்திரிய சங்கீதத்தில் பண்டிதர் மனிக்புவா தக்குர்தாசிடம் பயிற்சி பெற்றவர்.

1970ம் வருடம் ஜுலை மாதத்தில் பிறந்த அனுராதா சென்னை பல் கலைக்கழகத்தில் சங்கீததத்துறை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் B.A, M.A பட்டங்களைப் பெற்றுள்ள துடன் இந்த இரு பட்டங்களிலும் தங்கப் பதக்கங்களைப் பெற்றுள்ளார். அத்துடன் உலக சங்கீதத்தில் M.A பட்டப் படிப்பிற் காக புலமைப்பரிசில் பெற்று அமெரிக்கா வில் கொனக்ரிகற் மாநிலத்தில் உள்ள வெஸ்லியன் பல்கலைக்கழகத்தில் உயர் கல்வி பயிலும் வேளையில் மேற்கத்திய ஒப்பரா (Opera) ஜாஸ் (Jass) ஆகிய இசைகளில் பங்கு கொண்டதுடன் இந்தோனேசியா மற்றும் மேற்கு ஆபிரிக்கா இசை நிகழ்ச்சிகளிலும் பங்கேற்றுள்ளார். தனது M.A படிப்பிற்காக "இளையராஜா தமிழ் சினிமா கலாசாரத்தின் ஓர் ஒப்பிடமுடியாத இசைத் தொகுப்பாளர் (Composer)" என்ற தலைப்பில் அனுராதா எழுதிய ஆய்வுக் கட்டுரை பலரால் பெருமளவு பாராட்டைப் பெற்றதுடன், கார்லாண்ட் உலக இசை கலைக் களஞ்சியத்திலும் பிரசுரமாகியுள்ளது.

1987இல் கர்நாடக இசைக்கான இந்திய ஜனாதிபதியின் தங்கப் பதக்கம் பெற்ற அனுராதா, 1989ம் வருடத்தில் இந்திய மத்திய அரசின் புலமைப் பரிசினையும், 1991ம் வருடத்தில் வினாதனம்மாள் புலமைப் பரிசினையும் பெற்றுள்ளார். தனது 12 வயது முதல் இந்தியா முழுவ திலும் பல்வேறு வெளிநாடுகளிலும் இசை நிகழ்ச்சிகளை நடத்தி வரும் இவர் உல கின் பல நாடுகளில் பெருமளவு பாராட்டி னைப் பெற்றுள்ள ஓர் சிறந்த இசைக் கலைஞராகும்.

நலம் நலம் அறிய ஆவல்...... (காதல் கோட்டை), தில்ருபா... (பிரியம்), மீனம்மா.... (ஆசை), அன்பென்ற மழை யிலே.... (மின்சார கனவு), தாஜ்மகாலே (பெரியதம்பி), அச்சம் அச்சம் இல்லை.... (இந்திரா) ஆகியவை தமிழில் அவருக்கு புகழ் தேடித்தந்த பாடல்களாகும்.

மல்லிகையே (நினைத்தேன் வந்தாய்), பொட்டுமேல (ஜானகிராமன்), கருவேலக் காட்டுக்குள்ளே (பொற்காலம்) மனதோடு (இனியவளே) அகிய தமிழ் பாடல்களும், தேசிய விருது பெற்ற ஒரு தெலுங்கு திரைப்படத்தில் இடம் பெற்ற மூன்று பாடல்களும் அவரது வெற்றிப் பாடல் களாகும்.

1996ம் வருடத்தில் "ஆசை" திரைப் படத்திற்காக சிறந்த பின்னணிப் பாடகி விருதைப் பெற்ற அனுராதா அதே வருடத்தில் டாக்டர் ஜெயலலிதா சினி விருதினையும், சிறந்த பின்னணிப் பாடகி க்கான அஜந்தா விருதையும் பெற்றுள்ளார். அதே வருடத்தில் நலம் நலம் அறிய ஆவல் என்ற அவரது பாடல் தேசிய விருதிற்காக சிபார்சு செய்யப்பட்டது. அத்துடன் 'ராம் ஜானே...' என்ற ஹிந்தி பாடல் விற்பனையில் சாதனை படைத்த தைத் தொடர்ந்து அவருக்கு பிளாட்டினத் தினால் செய்யப்பட்ட CD தட்டு வழங்கப் பட்டது.

அறுபதுகளில் தமிழ், மலையாளப் படங்களிலும் பிரபல பின்னணிப் பாடகராக விளங்கியவரான அனுராதாவின் தாயா ரான சிறிமதி. றேணுகா அனுராதாவின் இசைத் திறமைக்கு பெருமளவில் உறுது ணையாக இருந்துள்ளார். மிகவும் வேக மாக புகழ்பெற்று வளர்ந்துவரும் அனுராதா, தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடப் படங்களின் இயக்குநர்களுக்காக கடந்த மூன்று வருடங்களில் 500க்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடியுள்ளார்.

"சென்னைப் பெண்" என்ற தலைப்பில் 1997 டிசம்பரில் வெளியிடப்பட்ட அனுராதா வின் தமிழ் பொப் இசை ஆல்பம் முதல் நான்கு மாதத்தினுள் 3 லட்சம் பிரதிகள் விற்பனையாகி சாதனை படைத்துள்ளது. இந்த இசைத் தட்டில் உள்ள பாடல்கள் அனைத்தையும் அனுராதாவே எழுதி இசையமைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. "மொடேன் பொண்ணு" என்ற அவரது தலைப்பு பாடலே சர்வதேச ரீதியில் முதலில் ஒலிபரப்பப்பட்ட தமிழ் பொப் பாடலாகும்.

அனுராதாவின் வெளியீடான "சென்னைப் பெண்" இசைத்தட்டு, 1997ம் வருடத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த பொப் இசைத்தட்டிற்கான ஸ்கிரீன்- வீடியோகொன் (Screen-VideoCon) விருதைப் பெற்றது. அதே வருடம் A. R. ரகுமானின் 'வந்தே மாதரம்' இசைத்தட்டும் அதே விருதைப் பெற்றது.

தென் இந்திய சினிமாத் துறையின், மேடை இசைக் கலைஞர்களில் மிகப் பிரபலம் பெற்றவரான அனுராதா ஸ்ரீராம் இந்தியா, சிங்கப்பூர், மலேசியா, சிறிலங்கா ஆகிய நாடுகளில் பொப் நிகழ்ச்சிகளையும் திரைப்படப் பாடல் நிகழ்ச்சிகளையும் நடத்தி பெரும் பாராட்டினைப் பெற்றுள்ளார். இப்படி இசைத்துறையை தனது உயிராகக் கொண்ட அனுராதா ஸ்ரீராம் அவர்களிடம் சில கேள்விக் கணைகளைத் தொடுத்தோம்.




உங்கள் தமிழ் திரையிசை வாழ்வின் ஆரம்பத்தை கொஞ்சம் சொல்லுங்களென்...

முதல்ல ஏ. ஆர் ரகுமான் சார் மூலம் 'இந்திரா' படத்தில 'அச்சம் அச்சம் மில்லை...' என்ற பாடலை பாட வாய்ப்பு கிடைத்தது. அதைத் தொடர்ந்து தேவா, இளையராஜா, வித்யாசாகர், சிற்பி, அகத்தியன் போன்ற பிரபல இசையமைப் பாளர்களின் இசையிலும், கீரவாணி, ரமணி, பாரதவாஜி, ராஜ் கோடி போன்ற தெலுங்கு இசையமைப்பாளர்களின் இசையிலும் பாடினேன். அத்துடன் ராம் ஜானே என்னும் இந்திப் படத்தில் பாடும் வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்த மாலிக் என்ற இசையமைப்பாளர் என்னை இந்தி திரைப்பட இசைக்கு அறிமுகப்படுத்தினார்.

நீங்கள் பாடியுள்ள வேறு சில படங்களைப் பற்றி குறிப்பிடமுடியுமா?

'ஆசை; திரைப்படத்தில் இடம்பெற்ற 'மீனம்மா' என்ற பாடல் எனது ஆரம்பகால வெற்றிப் பாடல்களில் ஒன்றாகும். இந்த பாடலுக்காக நான் சிறந்த பெண் பின்னணிப் பாடகருக்கான விருதைப் பெற்றேன். ரமணி பாரத்வாஜியின் இசையமைப்பில் தெலுங்குப் படமான 'சொகாசு யூட தரமா'வில் நான் பாடிய இரு பாடல்களும் எனக்கு பெரும் வெற்றியைத் தந்தது. வான்மதி, பசும்பொன், வைகறைப் பூங்கா, விஷ்ணு, கல்லூரி வாசல், தாயகம், தொட்டா சிணுங்கி, வில்லாதி வில்லன் என்பன எனது பாடல்கள் இடம்பெற்ற ஆரம்பகாலத் திரைப்படங்களாகும். மிக சமீபத்தில் மின்சார கனவு, காதல் கோட்டை, வன்ஸ்மோர், காதலி, வள்ளல், பகைவன், கோபாலா கோபாலா, பெரியதம்பி, பாஞ்சாலங்குறிச்சி, கல்கி, வாணி மகால், நேதாஜி, பிரியம், ஆஹா, இனியவளே.... (நிறுத்தி) இதுமட்டுமல்லாம பல புதிய தமிழ் திரைப்படங்களில் நான் பாடியிருக்கேன். சிலது இன்னும் வெளிவரல்ல. (சிரிப்பு) அதோட சிக்கார்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதமான மெல்லிசைக்கு

# NEW SHANKAR AND CO.

Original CD, Audio & Video

(Classical, Cinema & Devotional)

சிறுவர், சிறுமிகளின் உடைகள், பரிசுப் பொருட்கள்
மற்றும் அனைத்துக்கும் நாடுங்கள்
அன்பான சேவை

(416) 750 2370

நியூ சங்கர் கோ.














2365 Eglinton Av. East, (at Kennedy) Scarborough, ON. Canada


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சப்னே, அவுசர், காபி ஆகிய இந்தித் படங்களிலும் லேடிஸ் டாக்டர், பிற்ல தோரா, ருகம், மெருப்பு எனும் தெலுங்குப் படங்களிலும் பாடியுள்ளேன்.

இப் படங்களில் இடம்பெற்ற பாடல்கள் எனது பல்வேறுபட்ட திறமைகளை வெளிக் கொண்டு வருவதற்கு உதவியாக அமைஞ்சுது.

நீங்கள் எவ்வகை இசையை விரும்பிக் கேட்கின்றீர்கள்? உங்களுக்குப் பிடித்த பாடகர்கள் யார்?

மெற்டி காசன், குலாம் அலிஆசோ போஸ்லே, றிச்சாட் மாக்ஸ், மைக்கல் ஜாக்சன், லுசியானோ, பவரொட்டி, செசிலா பாற்றோலி, அமிர் கான், குமார் கந்தர்வா பார்பரா ஸ்ரார்ஸ்லான்ட், பிராந்த் சினாற்றா ஆகிய சிறந்த பாடகர்கள் யாவரும் எனது இசை வளர்ச்சிக்கு தூண்டுகோலாக இருந்து வருகின்றனர்.

இசைத்துறையில் பரந்த அனுபவம் பெற்றவரும், சகலவல்லவரான பாடகருமான நீங்கள் இந்திய இசைத்துறையில் உங்களது இடம் என்னவாகவிருக்கும் என எதிர்பார்க்கிறீர்கள்?

திரை இசைப் பாடல்களைப் பாடுவதே எனது சங்கீத தொழிலில் பிரதானமானதாக இருக்கும். நான் எனது திறமைகளை அபிநயத்துடன் வெளிப்படுத்தும் தன்மையைக் கொண்டிருப்பதனால், நான் மைக்கல் ஜாக்சன் அல்லது மரியா கேலி போன்ற பொப் இசைப் பாடகர் போன்று வளர வேண்டும் என்று எண்ணுகிறேன்.

மெக்னாசவுண்ட் நிறுவனத்துடன் இணைந்து இரு பொப் இசை அல்பங்களை வெளியிடும் முயற்சியில் நான் தற்போது ஈடுபட்டுள்ளேன். இவை வெளியிடப்பட்ட பின்பு இந்திய இசைத்துறையில் நான் கணிக்கப்பட வேண்டிய ஓர் சக்தியாக ஏற்றுக் கொள்ளப்படுவேன் என எதிர்பார்க்கிறேன். அத்துடன் இசை இயக்குனராவதற்கான சில வாய்ப்புகளும் எனக்குக் கிட்டயுள்ளன. மிகக் கூடிய விரைவில் நான் இந்த வாய்ப்புகளை பயன்படுத்த எண்ணியுள்ளேன்.

காதுக்கினிய பாடல்களையும், சில விரைவான நடனப் பாடல்களையும் (melodic), மேலும் சில காதல் உணர்வுப் பாடல்களையும், நாட்டுப் பாடல்களையும் பாடி ரசிகர்களைக் கவரும் நீங்கள் சிறந்த இசையமைப்பாளராக வரவேண்டுமென வாழ்த்துகிறோம்.

நன்றியுங்க. (சிரித்தபடியே)

• **விஜய் ஆனந்த்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவு, உடை, உறையுள், கம்பியூட்டர்

எமக்கு உணவு, உடை, உறையுள் எவ்வளவு முக்கியமோ அவ்வளவிற்கு கம்பியூட்டரும் முக்கியமாகிவிட்டது. கம்பியூட்டர் இல்லாமல் வாழ்வது 'உப்புச் சப்பில்லாத வாழ்க்கை' என்றாகிவிட்ட காலத்தில் அதைப்பற்றி அறியும் ஒரு தொடர் இது.

இத்தொடரில்........!

- கம்பியூட்டரும் அதன் செயற்பாடுகளும்
- கம்பியூட்டரும் அதன் பாகங்களும்

எமது நாளாந்த வாழ்வின் ஒவ்வொரு விடயத்திலும் கம்பியூட்டரின் தலையீடு தவிர்க்க முடியாததாக உள்ளது.

எங்கு சென்றாலும் கம்பியூட்டர் கம்பியூட்டர் என்று தலையைப் பிய்த்துக் கொள்ளவேண்டியுள்ளது. எது எப்படியோ கம்பியூட்டர் அறிவு என்பது முக்கிய தேவைகளில் ஒன்றாகிவிட்டதை யாராலும் மறுக்கமுடியாது.

வங்கிகளில் பணம் போடுவது, Bill Pay பண்ணுவது என்று வங்கித் தேவைகள் யாவும் கம்பியூட்டரில் மட்டுமே செய்யவேண்டும் என்ற நிலைவந்தால்.......

ரெலிபோன் எல்லாம் போய் கம்பியூட்டர் திரையில் யாழ்ப்பாணத்தில் இருப்பவரை நேரடியாக பார்த்துத்தான் கதைக்க வேண்டும் என்ற நிலைவந்தால்........

கம்பியூட்டர் அறிவு அவசியம் தேவை.

### சரி..... கம்பியூட்டர் என்றால் என்ன?



கம்பியூட்டர் என்பது மனிதன் மனிதனுக்காக உருவாக்கிய electronic இயந்திரம். இதை நாம் விரும்பியபடி Program செய்துவிட்டு அதனிடமிருந்து விதம் விதமான வடிவத்தில் பயன்களைப் பெற்றுக் கொள்ளலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மால் ஒரு வேலையை தொடர்ச்சியாக செய்ய முடியுமா? இல்லை இடையிடையே coffee, tea என்று இழுத்தடிப்பது வழமை. ஆனால் கம்பியூட்டர் அப்படியல்ல. ஓய்வே இல்லாமல் ஒரு வேலையை எத்தனை தடவை வேண்டுமானாலும் சலிப்பின்றி செயல்படுத்தும்.

அத்துடன் கடன் வாங்கிவிட்டு மறந்து விடும்(?) எம் மறதிக் குணங்கள் எல்லாம் அதனிடம் இல்லை. மாறாக ஒரு தகவலை வருடக் கணக்காக சேமித்து வைக்கும் திறன் உடையது.

### கம்பியூட்டர் எப்படி செயல்படுகின்றது?





படத்தில் காட்டியபடி Input, process, output என்பதே கம்பியூட்டரின் அடிப்படைச் செயற்பாடு. நாம் இரு எண்களைக் கூட்ட வேண்டும் என்றால் (46+55) முதலில் அவ்வெண்களை மூளைக்கு அனுப்புகிறோம். இச் செயற்பாடே Input என்கிறோம்.

அனுப்பிய இரு எண்களையும் மூளை கூட்டுகின்றது. அங்கு நடைபெறும் செயற்பாட்டையே process என்கிறோம்.

இதற்குரிய விடையை வெளிப்படுத்துவது output.

### INPUT/INPUT DEVICE

கம்பியூட்டருக்குள் அனுப்பவேண்டிய கட்டளைகளை/ தகவல்களை கம்பியூட்டர் புரிந்து கொள்ளும் விதத்தில் மாற்றி process (CPU)க்கு அனுப்பும் பகுதிகளை Input/Input Device என்கிறோம்.




Keyboard, mouse, scanner, micro phone போன்றவை கம்பியூட்டரின் பிரதான Input devices ஆகும். Scanner பொருத்தப்பட்ட மற்றும் Internet telephone பொருத்தப்பட்ட keyboardகள் விற்பனையில் இருந்தாலும் அவையெல்லாம் அடிப்படையில் ஒத்த தாகவே உள்ளன.

Keyboard இல் உள்ள ஒரு key ஐ நாம் அழுத்தும்போது அது கணப்பொழுதில் Binary எண் ஆக மாற்றப்பட்டு Central process unitக்கு அனுப்பப்படுகின்றது. ஏனெனில் Central process unit Binary எண்களை மட்டுமே புரிந்து கொள்ளும் திறன் உடையது.

இதுபற்றிய விபரத்தை பின்னர் அறிந்து கொள்வோம்.

### Output/ Output Device

எப்படி Input unit நமது கட்டளைகளை/ தகவல்களை Binary ஆக மாற்றி processக்கு அனுப்புகின்றதோ அதேபோல் output Deviceகள் process பண்ணி முடிந்த (CPU செய்து முடித்த) வேலைகளை மீண்டும் எமது பாவனைக்காக வெளிப்படுத்துகின்றது.



இதன் முக்கிய உதாரணமாக monitor மற்றும் printer, speaker போன்றவை அடங்கும்.

சாதாரண தேவைகளுக்காக பாவிக்கும் monitor கள் இரண்டு பிரிவுகளாக வருகின்றன

1. மானோகுறோம் - monochrome monitor
2. Color monitor

Color monitorகளே இன்று பெரும்பாலும் பாவனையில் உள்ளது. மானோகுறோம் monitorகளின் விலை குறைவாக இருந்தாலும் அவை அருகிக் கொண்டு வருகின்றன.

Monitor இன் றெசொலுசன் (Resolution) என்றால் என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு monitor படத்தை எவ்வளவு துல்லியமாக வெளிப்படுத்துகின்றது என்பதை நிர்ணயிப்பதே றெசொலுசன் என்பார்கள்.

Monitorஇன் திரையில் எவ்வளவு புள்ளிகள் (pixels) உள்ளன என்பதை வைத்தே இந்த றெசொலுசன் அளவிடப்படுகின்றது.

அதிக அளவிலான புள்ளிகளைக் கொண்ட monitorகளே துல்லியமாக படத்தை வெளி விடும் தன்மை கொண்டவை. உதாரணமாக 640X680 தொடங்கி 1600X1280 புள்ளிகள் வரை றெசொலுசன் உள்ள monitorகளும் சந்தையில் உள்ளன. இவற்றில் 1600X1280 புள்ளிகள் கொண்டவையே துல்லியமானவை.

வழமையான monitor இல் நமது TVஐப் போல் திரைகள் புறவளைவு கொண்டிருக்கும். இவை Cathod Ray Tube தொழில் நுட்பத்தில் இயங்குவதால் இவற்றை CRT monitor என்று அழைப்பார்கள். அத்துடன் தட்டைத்திரை (Flat screen) Monitor உம் பாவனையில் உள்ளது. இதுவே Lap Top கம்பியூட்டர்களில் பொருத்தப்பட்டிருக்கின்றது. அத்துடன் தனியாகவும் விற்பனையிலுள்ளதும் உள்ளது. கம்பியூட்டர் வைப்பதற்கு இட நெருக்கடி உள்ளவர்கள் இந்த தட்டைத் திரை Monitorஐ வாங்கலாம். இது கண்களை அதிகம் பாதிக்காது.

உங்கள் Monitor இன் கீழ்ப்பகுதியில் சில button கள் உள்ளனவா?

இவைதான் Analog/Digital Controlகள். Display இன் உயர அகலங்களை சரிப்படுத் தவும் Brightness, Contrast போன்றவற்றை சீராக்கவும் உதவுகின்றன. அநேகமாக Analog Control உருளைவடிவில் இருக்கும். Degital Control Push Button வடிவில் இருக்கும்.

## Process Unit
## (Central Processing Unit - CPU)



மனிதனுக்கு எப்படி மூளை செயல்படுகின்றதோ அதேபோல கம்பியூட்டரில் CPU செயல்படுகின்றது.

Input மூலமாக கிடைத்த தகவல்களை/ கட்டளைகளை செவ்வனே செய்து அதை Output Unitக்கு அனுப்புவதே இதன் வேலை யாகும்.

இதனையே CPU என்று அழைப்பார்கள்.

இதன் உள்ளே Mother board, Hard Drive, Micro Processor, CDRom, Floppy Disk, Video Card, Sound Card, Modem போன்ற பகுதிகள் உள்ளன. இவற்றை விரிவாக அடுத்த இதழில் பார்ப்போம்.

*• செல்லையா ராஜ்மோகன்*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல் அடைப்பதென்பது என்ன? இது அவசியமா?

டக்டர் அ. செல்வராஜா

பற்களில் சூத்தை ஏற்படுவதனால் அல்லது விபத்தினால் பற்கள் உடைவதனால் பல் அடைக்க நேரிடலாம். இதனால் பாதிக்கப் பட்ட பற்களைத் தொடர்ந்து வைத்திருக்க முடியும். வாழ்க்கையில் எதுவுமே நிரந்தர மில்லை என்னும் கூற்று பல்அடைக்கும் விடயத்திலும் உண்மைதான். எந்த விதமான பல் அடைப்பும் வாழ்க்கை முழுவதும் அப்படியே நிரந்தரமாய் இருக்கப் போவதில்லை. நமது பரா மரிப்பைப் பொறுத்து பல பல் அடைப்புகளை வாழ்க்கை முழுவதும் வைத்திருக்கப் போகிறேமா அல்லது திரும்பச் செய்ய வேண்டிவருமா என்பதை முடிவு செய்யலாம். சில பல்அடைப்புகள் 20, 25 வருடங்களுக்கும் அதிகமாய் திரும்பத் திரும்ப அடைக்காமல் வைத் திருக்கலாம்.

வருடாவருடம் பலவிதமான பல் அடைக்கும் மருந்துகள் வந்துகொண் டிருக்கின்றன. நிரந்தரமாய் பல் அடைப்பதற்கு அமல்கம் (amalgam), போர்சலின் (porcelain) கொம்பசிற் (composite) மற்றும் தங்கம் (gold) முதலியவை பாவிக்கப் படுகின்றன. இதில் அமல்கம்தான் பலரின் பற்களில் அடைக்கப்பட்டிருக்கும் ஈயம் அல்லது வெள்ளி அடைப்பாகும் (silver filling). இதில் பாதரசம் (mercury) இருப் பதனால் உடம்பிற்கு கெடுதல் வரக்கூடும் என்று ஒருசில ஆராய்ச்சிகள் கூறு வதனால் இப்பொழுது பலர் இதைத் தவிர்ப்பதும் உண்டு. இதற்குப் பதிலாக பல் நிறத்தில் உள்ள கொம்பசிற் என்ற பல்அடைக்கும் பொருளைப் பாவிக் கின்றனர். இந்த அமல்கம் அடைப்பு கள்பற்றி பின்னர் ஒருகட்டுரையில் விபரமாய் எழுதுகிறேன்.

**முளையில் கிள்ளுவது உத்தமம்.**

**அடிக்கடி பற்களைப் பரிசோதிப் பதன் மூலம் பற்சூத்தையை சிறிதாய் இருக்கும்போதே கண்டுபிடித்துவிடலாம். பல் அடைத்திருந்தாலும் இதைப்பரி**




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சோதித்துக் கொள்வது முக்கியம். இதனால் நிரப்பப்பட்ட பல்லில் எந்தப் பழுதும் இல்லை என்பதை உறுதிப் படுத்திக் கொள்ளலாம். பல்லில் அழிவு இருந்தால் உடன் அது கட்டாயமாகப் பிரச்சனை தரவேண்டும் என்பதல்ல. அந்தச் சின்ன அழிவைக் (early caries) கண்டுபிடித்து நிரப்பிவிட்டால் பின்னர் பெரிய பிரச்சனைகளைத் (பல்வலி, வீக்கம் பல்இழப்பு, மற்றப் பல் பாதிப் படைவது) தவிர்க்க முடியும். இப்படிச் செய்வதன் மூலம் பல்லைப் பாதுகாத்து வைப்பதுமட்டுமல்ல செலவும் குறைவு என்பதை நினைவில் வைத்திருப்பது நன்று. சில நேரங்களில் நேரடிப் பரிசோதனையில் கண்டுபிடிக்க முடியாத பற்சூத்தைகளை x-ray படத்தின் மூலம் கண்டுபிடிக்க முடியும்.

### அறிகுறிகள் என்ன ?

உங்களுக்குப் பல்அடைக்க வேண்டுமா என்பதைப் பல் வைத்தியரிடம் போகாமலே எப்படி அறிவது என்று பலர் யோசிக்கலாம். அடிக்கடி ஏதாவது ஒரு பல்லில் தொடர்ந்து கூச்சம் ஏற்பட்டுக் கொண்டிருப்பது அல்லது சாப்பிடும்போது ஒரு குறிப்பிட்ட பல்லில் வலிபோன்ற உணர்வு ஏற்படுவது பற்சூத்தையின் அறிகுறியாய் இருக்கலாம். இந்தக் கட்டத்தில் பரிசோதித்துப் பார்ப்பது நன்று. பற்சூத்தை பெரிதாகி வலியுடன் பல் வைத்தியரிடம் போகும் போது சில நேரங்களில் சாதாரண பல் அடைத்தலின் மூலம் பல்லைக் காப்பாற்றும் கட்டம் தாண்டி பல் வேர் அடைக்கவேண்டி வரலாம்.

பல் வேர் அடைப்பதுபற்றி அடுத்த இதழில் எழுதுகிறேன். பல்லில் ஒரு பிரச்சனை என்னவெனில் அடைத்த பல்லில்கூட அடைப்பின் கீழே அல்லது அதன் ஓரமாய் புதிய பாதிப்பு (marginal leakage) ஏற்படலாம். இப்படியான சந்தர்ப்பத்தில் பல்லிற்கு அதிக பாதிப்பு வரும்வரை எந்த அறிகுறியும் ஏற்படாமலே போகலாம்.



"நட்பைப் பற்றி கட்டுரை எழுதச்சொன்னா ஒரு முற்றுப் புள்ளியும் வைக்காம எழுதியிருக்க?"

அது ஒன்னுமில்ல சார் நட்புக்கு முற்றுப் புள்ளி வைக்க எனக்கு மனசு வரல்ல...!

### ஏற்கனவேயுள்ள பல் அடைப்புகள் மாற்றவேண்டுமா?

அழகிற்காக பல சந்தர்ப்பங்களில் பல் அடைப்புகள் மாற்ற வேண்டிவரலாம். முன்னர் பாவித்திருந்த பல் அடைப்பு காலப்போக்கில் நிறம் மாறியிருக்கலாம். இது முன்பற்களில் அழகைக் கெடுக்கும் விடயமாகும். பல் அழகாய் இருக்க வேண்டும் என்று விரும்புவது எந்த வயதினருக்கும் பொருந்தும். வயது போகப் போக சில பழைய பல் அடைப்புகளில் சிறு துண்டுகள் உடைந்துபோய் கூரிய பகுதிகள் வாயின் உட்புறத்தில் புண் உண்டாக்க நேரிடலாம். எந்தப் பல் அடைப்புமே இயற்கை நமக்குத் தந்த பல்லின் கடினத்தைத் தரப்போவதில்லை என்பதை நாம் இங்கு நினைவில் வைத்திருப்பது நன்று. எவ்வளவிற்கு ஒருவருடைய வாயில் பல் அடைப்புகள் அதிகமாய் இருக்கிறதோ அவ்வளவிற்கு பல் அடைப்புகள் உடையும் சந்தர்ப்பம் அதிகமாய் இருக்கும் என்பது உண்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# WORLD TAMIL RADIO

Toronto GEETHAVAANI Montreal

## ஆழமான புலமை

# கீதவாணி

உலகத் தமிழ் வானொலி



2800 Eglinton Av. East., Scarborough, ON., M1J 2C9 Canada.

Toronto: 416-267-1100, Fax: 416-267-7707, Talkshow: 416-267-8255


Montreal: 514-497-8002, Talkshow: 514-733-9044


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பல் அடைப்புகளைப் பராமரிப்பது எப்படி?

வீட்டிற்குள் சுத்தமாய் இருந்தால் அந்தச் சூழலில் வாழ்பவர்கள் ஒரு சுகாதாரமான சுற்றாடலில் வாழ்வது போன்றுதான் வாய் சுத்தமாய் இருந்தால் அதற்குள் இருக்கும் பற்கள் மட்டுமல்ல அந்தப் பற்களில் இருக்கும் பல் அடைப்புகளும் நல்ல பராமரிப்பில் இருக்கும். உணவருந்திய பின் பற்துரிகை கொண்டு பற்களைச் சுத்தம் செய்வது முக்கியம்.

நீங்கள் (முக்கியமாய் நித்திரையில்) பற்களைக் கடிப்பவராய் அல்லது பற்களை நெருடுபவராய் இருந்தால் பல் அடைப்புகளையும் பற்களையும் இப் பாதிப்பில் இருந்து தடுக்க என்றுள்ள (night guard) சாதனத்தைப் பயன் படுத்தலாம். கடினமான உணவுகள் (hard candy), ஐஸ்கட்டி, நண்டுக்கோது, புழுக்கொடியல் போன்றவற்றைக் கடிக்



விளையாட்டு விபத்தில் பாதிக்கப்பட்ட பல் இது



பல் அடைத்த பின்னர் அதே பல்லின் தோற்றம்.


GEMINI TOURS LTD.

For all your Travel Needs
Lowest Guaranteed
Air Fares, Cruise,
Vacation Packages and
Much More.....

ரொறன்ரோ மாநகரில் குறைந்த விலையில் நிறைந்த உத்தரவாதத்துடன் விமானப் பிரயாணச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

9 Clintwood Gate,
2nd Floor, Scar, ON
யாழ்றடன் மார்க்கட்க்கு மேலே

Tel: (416) 441-1522




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்போது கவனமாய் இருக்கவேண்டும். பல் அடைப்புகள் பாதிப்படைவதற்கு இவை ஒரு முக்கிய காரணமாகும்.

## எது சிறந்த பல் அடைப்பு ?

### அமல்கம் (Amalgam)

இது வெள்ளி அல்லது கறுப்பு நிறமாய் இருக்கும். 155 வருடங்களுக்கு மேல் பாவனையில் இருக்கும் இந்தப் பொருள் அனேக காலமாய் நிலைத்திருக்கக் கூடியது. நான் முன்னர் குறிப்பிட்டது போன்று இந்தப் பொருளில் இருக்கும் பாதரசத்தினால் சிலர் இதை விரும்புவதில்லை.

### கொம்பசிற் (Composite)

இது பல்லின் நிறத்திற்கு ஏற்ப பாதிக்கப்பட்ட பல்லுடன் ஒட்டி அடைத்து விடக்கூடிய ஒரு பொருள். இதே பொருளைக் கொண்டு பல் சூத்தையால் பாதிப்படையாமல் ஆனால் வேறு காரணங்களால் நிறம் மாறிய பற்களையும் ஒட்டி மூடிமறைக்க முடியும்.

மேலே குறிப்பிட்டதை விட பற்கிரீடம் (Crown), செயற்கைப்பல் (full and partial dentures), வினீர் (porcelain veneer) என்று வேறுபல வழிமுறைகளும் உண்டு. உங்களுக்குப் பல் அடைக்க நேர்ந்தால், இவற்றில் உங்களுக்கு எது சிறந்தது என்பது பற்றி உங்கள் பல் வைத்தியரிடம் விபரமாய் கேட்டறியலாம். பல் அடைத்ததால் உங்களுக்கு எந்தப் பிரச்சனையும் இருக்கப் போவதில்லை என்ற தவறான பாதுகாப்பு (false sense of security) எண்ணத்துடன் இருந்து விடுவது மனித இயல்பு. பற்களைச் சுத்தமாய் வைத்திருப்பது பல் முரசு, பற்கள் என்றெல்லாம் பல் அடைப்புகளுக்கும் மிக முக்கியம் என்பதை நினைவில் கொள்ளல் நலம்.

(உங்கள் கேள்விகளை அனுப்பிவையுங்கள்)


NORWICH UNION

Leading Insurance Company

- ஆயுள் காப்புறுதி
- ஸ்கொலர்ஷிப்
- வைத்தியம்
- வலது குறைந்தோர்
- பிரயாணம்
- முதலீட்டுத் திட்டங்கள்
- வியாபாரம்



அனைத்திலும் நீண்ட கால அனுபவமுடையவர்

T. K. THEVARAJAH

Sale's Excellence Award Winner

த. க. தேவராஜா

'நோர்விச் யூனியன்' அதிசிறந்த விற்பனையாளர் விருது பெற்றவர் (இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன முன்னாள் உத்தியோகத்தர்)

உங்கள் தேவைகளுக்கு தமிழில் பேசி இவருடன் உரையாடலாம்

Tel: (905) 471-9061




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரோஜாவின்


# பாலர் பூங்கா

அன்புத் தம்பி தங்கைகளே!

ஒவ்வொரு மாதமும் ரோஜாவின் பாலர் பூங்காவில் உங்களோடு ஒன்றாக உலாவர விரும்புகிறேன். பாலர் பூங்காவின் கதவுகள் எப்பொழுதும் உங்களுக்காக திறந்திருக்கும். எங்கள் மொழி, பண்பாடு, கலாசாரம் ஆகியவற்றைக் கட்டிக்காக்க வேண்டிய பொறுப்பு புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் சிறுவர், சிறுமிகளான உங்களையே சாரும், ஏனெனில் இவற்றின் எதிர்காலம் உங்கள் கையிலேயெ தங்கி இருக்கின்றது. எங்கள் மொழி அழிந்தால் எங்கள் இனமும் அழிந்துவிடும். எந்த மொழியையும் இனத்தையும் அழிந்து போகாமல் காப்பதற்காக லட்சியக் கனவுகளோடு புலம் பெயர்ந்தோமோ அந்த லட்சியத்தைக் நாங்கள் மறந்துவிடக் கூடாது. நீங்கள் மனது வைத்தால் எங்கள் மொழியும் இனமும் என்றென்றும் வாழும்! இதோ! உங்களுக்காக வர்ணம் தீட்டும் போட்டி ஆரம்பமாகிறது. உங்கள் ஆர்வத்தையும், திறமையையும் உலகறியச் செய்யுங்கள்! மீண்டும் அடுத்த பூங்காவில் சந்திக்கும்வரை-

'அன்புடன்
மாலினி அக்கா'

## வர்ணம் தீட்டும் போட்டி: 1



(12 வயதிற்குட்பட்டவர்களுக்கு மட்டும்)

மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி ரோஜாவின் முகவரிக்கு அனுப்புங்கள். சிறப்பாக வர்ணம் தீட்டிய ஒருவருக்கு பரிசு காத்திருக்கின்றது. மேலும் இருவருக்குப் பாராட்டுக்கள் காத்திருக்கின்றன.

பெயர், பிறந்த திகதி, பாடசாலை, தொலைபேசு இலக்கம், விலாசம் என்பவற்றையும் எழுத மறவாதீர்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறள்

1. அகர முதல எழுத்தெல்லாம்; ஆதி
பகவன் முதற்கே உலகு.
அகரம் எழுத்துக்களுக்கு முதன்மை. ஆதிபகவன் உலகில்
வாழும் உயிர்களுக்கு முதன்மை.

2. கற்றதனால் ஆய பயனென்கொல், வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்.
தன்னை விட அறிவில் மூத்த பெருதகையாளரின் முன்னே
வணங்கி நிற்கும் பண்பு இல்லாவிடில் என்ன தான் ஒருவர்
கற்றிருந்தாலும் அதனால் என்ன பயன்? ஒன்றுமில்லை!

3. மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ்வார்.
மலர் போன்ற மனதில் நிறைந்தவனைப் பின்பற்றுவோரின்
புகழ்வாழ்வு, உலகில் நெடுங்காலம் நிலைத்து நிற்கும்.



## பசுவும் கன்றுக்குட்டியும்

தோட்டத்தில் மேயுது வெள்ளைப்பசு- அங்கே
துள்ளிக் குதிக்குது கன்றுக்குட்டி
அம்மா என்குது வெள்ளைப்பசு- உடன்
அண்டையில் ஓடுது கன்றுக்குட்டி

நாவால் நக்குது வெள்ளைப்பசு-பாலை
நன்றாய்க் குடிக்குது கன்றுக்குட்டி
முத்தம் கொடுக்குது வெள்ளைப்பசு-மடி
முட்டிக் குடிக்குது கன்றுக்குட்டி.

-கவிமணி தேசிய விநாயகம்

ரோஜாவின்

# பாலர் பூங்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வி. சுவர்ணா ஆனந்தராஜா

ஆனந்தராஜா அவர்களினதும் அவரது அன்பு மனைவியார் திருமதி. வசந்தகுமாரி ஆனந்தராஜா அவர்களதும் மூத்த மகள் சுவர்ணா. தமிழை உயிரினும் மேலாக நேசிக்கும் பெற்றோரின் அன்பும் பண்பும் நிறைந்த வளர்ப்பில் தமிழ் மணம் பரப்பும் மலராக சுவர்ணா மொட்டவழ்கிறார்.

சுவர்ணாவின் வீட்டுள் செல்பவர்களின் கவனத்தை ஈர்ப்பது அங்கு வரிசை வரிசையாக, அழகாக அடுக்கப்பட்டிருக்கும் பரிசுக் கிண்ணங்கள், கேடயங்கள், சான்றிதழ்கள் என்றால் மிகையாகாது. அவ்வளவு பரிசுக் கிண்ணங்களும் தமிழுக்கு மாத்திரமே பெற்றுக் கொண்டவையல்ல. பள்ளிக்கூடத்தில் ஆங்கிலம் போன்ற ஏனைய பாடங்களிலும் திறமை காட்டியதால் பெற்றுக் கொண்ட பரிசுப் பொருட்களும் அங்குள்ளன. பலமுறை திருக்குறள் போட்டிகளிலும், பேச்சுப் போட்டிகளிலும் தங்கப்பதக்கங்களைப் பெற்றுள்ளார் சுவர்ணா!

சுவர்ணா ஈழத்தில் பிறந்தவர். ஐந்தாவது வயதில் பெற்றோருடன் கனடா வந்தார். பன்னிரண்டு வயது நிரம்பிய சுவர்ணாதமிழ் பேசும்போது இவர் ஈழத்திலிருந்து அண்மையில் வந்தவர் என்ற எண்ணத்தை எம்முள் எழுப்புகின்றது. அவ்வளவு தெளிவான உச்சரிப்பும், அழகான தமிழ் வசனநடையும், பண்பான பழக்கங்களும் இச்சிறுமியிடம் உள்ளன. சிறுவர்களையும், பெரியோர்களையும் மிகவும் பண்பும் பணிவும் நிறைந்த சுவர்ணா ஒருசில கணங்களுக்குள் கவர்ந்து விடுகிறார். இதற்குக் காரணம் என்ன?



வளரும்
நிலத்தின்
தன்மையைப்
பொறுத்ததே
பயிரின் வளர்ச்சி
என்றறிவோம்!
தளராத
ஊக்கமும்
முயற்சியும்
நிறைந்த
பெற்றோரே
சுவர்ணாவின் வளர்ச்சிக்குக் காரணம் என்பதை எவரும் ஏற்றுக்கொள்வர்.

சுவர்ணா நடிப்புத் திறமை மிக்கவர், இசையறிவு நிரம்பியவர். இவர் நடித்த "களத்தில் காத்தான்", 'சங்கிலியன்', 'அப்பூதியடிகள்' போன்ற நாடகங்களைப் பார்த்த பல்லாயிரக்கணக்கான மக்கள் சுவர்ணாவைத் தங்கள் மகளாகவே எண்ணிப் பெருமைப்படுகின்றனர். அண்மையில் உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் நடத்திய திருக்குறள் விழாவில் 'தமிழன்னை தந்த தவப்புதல்வர்'களில் ஔவையாராகத் தோன்றி மக்களின் பலத்த கரகோஷத்தைப் பெற்றார்.

கீதவாணி வெள்ளிக்கிழமைகளில் நடத்தும் 'சின்னச் சின்னப் பூக்கள்' சிறுவர் நிகழ்ச்சியில் பங்குபற்றி, தனது திறமையைக் காட்டி, நூற்றுக்கணக்கான சிறுவர்களின் உள்ளத்தையும், நேயர்களின் உள்ளத்தையும் கவர்ந்துள்ள சுவர்ணாவுக்கு மிகவும் பிரகாசமான எதிர்காலம் இருக்கிறது. தமிழன்னை சுவர்ணாவின் தமிழ் ஆர்வம் கண்டு ஆசி நல்குகிறாள்!

## ரோஜாவின் பாலர் பூங்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரும்புகள்

புலம் பெயர் வாழ்வில் எத்தனையோ சமூக பொருளாதார கலாசார மாற்றங்களுக்கு மத்தியில் நாம் எம்மைப் புகுத்திக் கொண்டாலும் இன்னும் எமது பண்பாடும் கலைகலாசாரங்களும் அவ்வப்போது துலங்கிக்கொண்டுதான் இருக்கிறது. ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் நிஜமாயும் நிழலாயும் சில எண்ணக் கனவுகள் திரையால் மறைக்கப்பட்டிருக்கிறது. பட்டைக்குப் பின் பளபளக்கும் வைரங்கள்போல், அவரவர் திறமைக்கேற்ப சந்தர்ப்ப சூழ்நிலைகள் சுமுகமாய் அமையும்போது அவர்களின் உணர்வுகளுக்கு விடுதலை கிடைத்து உருவம் பெறுகிறது. இவ்வாறு மறைந்து கிடக்கும் திறமையான பல அரும்புகளில் இருந்து ஒரு அரும்பை அறிமுகம் செய்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

"பாபு" இவரை எல்லோரும் இப்படித்தான் அழைப்பார்கள். முழுப்பெயர் உதயகுமார் ராஜரட்ணம். Centennial collegeஇல் computer program இறுதி யாண்டு மாணவர். இவரை நான் முதன் முதலாக உலகத்தமிழர் இயக்கக் கலை பண்பாட்டுக் கழகத்தினரின் பொங்கல் விழா கலைநிகழ்ச்சியொன்றில் சந்தித்தேன். அதில் இவர் ஒரு இராணுவத் தளபதியாய் கொஞ்சம் தமிழ், கொஞ்சம் கோபம் கலந்து கொஞ்ச நேரத்தில் நிஜமா அல்ல நிகழ்வா என்னும் படியாய் கொடுக்கப்பட்ட பாத்திரத்துக்கு குறைவைக்கவில்லை. தான் எடுத்துக் கொண்ட பாத்திரமாகவே மாறிப்போய்ப் பார்வையாளர்களின் பாராட்டுக்குப்பதிலாய் கோபத்தைச் சம்பாதித்துக் கொண்டவர் இவர். "நான் நாடகங்களில் என்ன பாத்திரம் எண்டாலும் நடிப்பன். முதல் முதலா நாடகத்தில் நடிக்கும் போது கொஞ்சம் பயமாய்த்தான் இருந்தது. ஆனால் நான் நடித்து முடித்த பின்னர் எல்லோரும் நல்லா இருக்கு என்றபோது எனக்கே நம்ப முடியவில்லை" என்று தனது முதல் அனுபவத்தைச் சொல்கிறார்.

இவர் ஆரம்ப காலங்களில் மேடை நாடகங்களைவிட பாடல்களில்தான் அதிக நாட்டமுடையவராக இருந்தார். மேடைகளில் பாடவேண்டும் இசைக்கருவிகள் வாசிக்கவேண்டும் என்பதே இவரின் ஆசை. Key boarding வாசிக்கக் கற்றுக் கொண்டு வருகிறார் இவர். பாபு ஓரிரு வானொலி நாடகங்களிலும் பங்கேற்றிருக்கிறார். அவ் அனுபவம் பற்றிக் கூறும் போது "என்னவோ தெரியாது பெரும்பாலும் நான் வானொலி நாடகங்களில் வயோதிப பாத்திரங்களிலேதான் அதிகம் பங்கேற்கிறேன். சிலநேரம் என்னுடைய குரல்வளம் அப்படியான கட்டங்கள் செய்யும்போது நல்லா இருக்கு என்ற காரணத்தால்தான் என்னை அப்படியான பாத்திரங்களுக்கு தயாரிப்பாளர்கள் தெரிவு செய்கிறார்களோ தெரியாது" என்றார்.

"உங்களுக்கு வயோதிபப் பாத்திரங்கள் நடிப்பது பிடித்திருக்கிறதா அல்லது நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள் சொல்வதைச் செய்கிறீர்களா" என்று கேட்டபோது "நான் வயோதிபக் கட்டங்கள் என்பது அப்பாவோ அண்ணாவோ அல்லது ஊரிலை ஒரு பெரிய மனுசனா உள்ள கட்டங்களைத்தான். ஆனாலும் நான் ஒரே நாடகத்தில் இரண்டு விதமான பாத்திரங்களில் கூட பங்கேற்கிறேன். பொதுவாக நிகழ்ச்சியைத் தயாரிக்கிறவரோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அல்லது நாடகங்களை எழுதி நெறியாள்கை செய்வார்களோ பாபுவுக்கு இந்தக் கட்டம் நல்லா இருக்கும் எண்டு சொன்னால் நான் சரி எண்டு அந்தப் பாத்திரத்தை ஏற்று நடிப்பன். பொதுவாக ஒரு நாடகம் நல்லா வரவேணும் எண்டால் அதிலை பங்கு பற்றுகிற ஒவ்வொருவரும் ஒற்றுமையாய்ப் பங்களிப்பு செய்யவேணும். இல்லையெண்டால் எவ்வளவுதான் ஒருவர் நல்லா நடிச்சிருந்தாலும் நாடகம் பேசப்படாது."

பாபுவைப் பொறுத்த மட்டில் நாடகங்கள் ஒவ்வொன்றுக்கும் எழுதப்பட்ட பாத்திரங்கள் அனைத்தும் முக்கியமானவையே. ஆகவே எடுத்துக்கொண்ட பாத்திரத்தை அந்த நாடகத்தின் வெற்றிக்கு எவ்வளவு தூரம் உயிர் கொடுக்க முடியுமோ அவ்வளவு தூரம் முயற்சி செய்ய வேண்டும் என்பதே ஒரு கலைஞனின் முதற் கடமையாகும் என்கிறார்.

புலம் பெயர் தேசத்தில் துளிர் விடும் படைப்புகள் ஒவ்வொன்றும் எங்கள் தேசத்தின் நினைவுகளையும் நிகழ்வுகளையும் சித்தரிக்க வேண்டும். அதன் மூலம் நாம் எமது கலைகளையும் கலாசாரத்தையும் பேணிப் பாதுகாப்பதோடு எமது எதிர்காலச் சந்ததியையும் வளமான ஓர் பாதையில் வழிநடத்திச் செல்லலாம் எனும் கொள்கையில் அசையாத நம்பிக்கை கொண்டிருக்கிறார் இவர்.

பொதுவாக, ஆடம்பரமான கொண்டாட்டங்களையும் கேளிக்கைகளையும் தவிர்த்து நமது தேசத்தின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டுக்கும் இங்குள்ள ஒவ்வொருவரும் பாடுபட வேண்டும் என்பதுதான் இவரின் ஆசை. அதற்காக தானும் தன்னால் இயன்ற உதவிகளையும் பங்களிப்புக்களையும் செய்யத் தயாராக உள்ளார்.

பார்த்ததிலும் பழகியதிலும் பாபு ஒரு நல்ல கலைஞன் என்று புரிகிறது. பாத்திரங்களை முழுப்பங்களிப்போடு செய்வதால் இவருக்கு நாடகத்துறையில் ஒரு நல்ல எதிர்காலம் உண்டு. இங்கள்ள நாடகத் தயாரிப்பாளர்கள் இவரைப் பயன்படுத்திக் கொள்ளலாம். நல்ல நாட்டமும் ஈடுபாடும் உள்ள கலைஞன். பாபுவுக்கு நல்ல எதிர்காலம் அமைய எனது மனமார்ந்த வாழ்த்துக்களை ரோஜா இதழின் சார்பிலும், இனிய வாசகர்கள் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

• ***கௌதம்***




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்டெபி

'ஸ்டெபியின் 34 நிமிடங்கள்'

'டிக்கட் வாங்கி
நேரம் பிந்தி வந்தவர்கள்
போட்டியைப் பார்க்காது
பரிசு வழங்கும்
வைபவத்தைப்
பார்த்துவிட்டுப்
போனார்கள்!'






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கி
# றா
# ப்

உலகப் புகழ் பெற்ற டெனிஸ் ஆட்டக்காரர்கள் வரிசையில் தன்னை இணைத்துக் கொண்ட ஸ்டெபி கிறாப் சென்றாண்டு டெனிஸ் விளையாட்டிலிருந்து ஓய்வுபெற்று கோடிக்கணக்கான ரசிகர்களை வியப்பில் ஆழத்தியுள்ளார்.


1969ம் ஆண்டு ஜூன் மாதம் 14ம் திகதி ஜேர்மனியிலுள்ள மான்கெயிம் என்ற நகரத்தில் பிறந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










ஸ்டெபியின் தந்தை பீற்றர் கிறாப் பகுதிநேர டெனிஸ் பயிற்றுனராக கட மையாற்றிவந்தார். அந்த நேரத்தில் ஸ்டெபிக்கு இயற்கையாகவே டெனிஸில் ஈடுபாடு வந்தது அதி சயமில்லை. ஸ்டெபி 4 வயது ஆகுமுன்னரே வீட்டினுள் தந்தை யாருடன் மரப்பலகையிலான மட்டையு டன் டெனிஸ் ஆடத்தொடங்கிவிட்டார். இரு கதிரைகளுடன் ஒரு நூலைக் கட்டி, வலையாகப் பாவித்தார்கள். தனது 5 வயதில் 7 வயதுக்குட்பட் டோருக்கான டெனிஸ் போட்டியில் பங்குபற்றுவதற்கு விசேட அனுமதி பெற்று கலந்து கொண்டு தோல்வி யைத் தழுவினார். போட்டி முடிவின்போது கண்ணில் நீர் வழிய மைதானத்தை விட்டு வெளி யேறினார். ஆனால் அடுத்த வருடம் இதே போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டினார்.



கடின பயிற்சியும், ஊக்கமும், தந்தையின் வழி காட்டலும் சிறு வயதிலேயே பெரும் புகழைத் தேடித்தந்தன. 13 வயதில் 18 வயதுக்குட்பட்டோரின் ஆட்டத்திற் கலந்து கொண்டு ஜேர்மனி சுற்றுப் போட்டி யிலும், ஐரோப்பிய சுற்றுப் போட்டியிலும் வெற்றிவாகை சூடினார். அதன் பின் உலகத்தின் புகழ்பெற்ற போட்டிகளில் கலந்துகொள்ளத் தொடங்கினார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1985இல் புகழ் பூத்த கிறிஸ் எலற் லோயிட்டுடன் நடந்த போட்டியில் 4-6, 2-6 என்ற கணக்கில் தோல்வியுற்றார். ஆனால் 1986இல் லோயிட்டை வெற்றி கொண்டது, அதன்பின் ஒருமுறையும் கிறிஸ் எவற்றிடம் தோற்கவில்லை. இன்னொரு புகழ்பூத்த வீராங்கனை மார்ட்டினா நவரற்றிலோவாவிடம் 1985இல் தோற்று, 1986இல் மார்ட்டி னாவுடனான முதல் வெற்றியைப் பெற்றார். 1987இல் மார்ட்டினா, கிறிஸ் எவற், ஸ்டெபி ஆகியோர் முறையே 1,2,3 ஸ்தானங்களில் இருந்தனர்.



1987 ஜுன் 5ம் திகதி French Openஇல் மார்ட்டினாவை 6-4, 4-6, 8-6 என்ற கணக்கில் வெற்றி கொண்டு முதலாவது Grand Slam வெற்றியைப் பெற்றார். 1987 ஆகஸ்ட் மாதம் 16ம் திகதி லொஸ் ஏஞ்சலில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் கிறிஸ் எலற்றை வெற்றி கொண்டு 1ம் நிலை ஆட்டக்காரராக வந்தார். இதைத் தொடர்ந்து 186 வாரங்கள் காப்பாற்றி வந்தார். 1988இல் Grand Slam என்று சொல்லக்கூடிய அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், அவுஸ்திரேலிய போட்டிகள் நான்கை யும் வென்றார். இச் சாதனை ஆண் அல்லது பெண் டெனிஸ் விளையாட்டு வீரர் எவராலும் இன்றும் செய்யப்படாத ஒன்று. இதேபோல்தான்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## French Open

**இறுதிப் போட்டியை 34 நிமிடத்தில் வென்றெடுத்து சாதனை படைத்தார். டிக்கட் வாங்கி நேரம் பிந்தி வந்தவர்கள் போட்டியை பார்க்காது பரிசு வழங்கும் வைபவத்தைப் பார்த்துவிட்டுப் போனார்கள்.**

ஸ்ரெபியின் வாழ்க்கையில் அதியுன்னதமாக விளையாடப்பட்ட போட்டி 1988இல் விம்பில்டனில் நடைபெற்ற இறுதிப் போட்டியாகும். மார்ட்டினாவுடன் முதலாவது Set இல் 5-7 என்ற கணக்கில் தோற்று இரண்டாவது Set இல் 0-2 என்ற இடத்திலிருந்து 6-2 என்ற கணக்கில் வெற்றி கொண்டு; இறுதி Set ஐ 6-1 என்ற கணக்கில் வெற்றி கொண்டார். பல முண்ணனி நட்சத்திரங்களுடன் போட்டி போட்டு வென்ற ஸ்டெபிக்கு போட்டியாக மோனிக்கா செலஸ் என்னும் இளம் ஆட்டக்காரர் 1990இல் தோன்றினார். 1991இல் தனது முதல் நிலையை செலஸ் இடம் பறிகொடுத்தார். 1993இல் ஸ்டெபியின் ரசிகர் என்று சொல்லப்பட்ட ஒருவரால் செலஸ் கத்தியால் குத்தப்பட்டார். இது செலஸ் இற்கு மட்டுமல்ல ஸ்டெபிக்கும் பாரிய தாக்கத்தினை டெனிஸ் உலகில் ஏற்படுத்தியது. உலகின் பல்வேறு நகரங்களில் பலதரப்பட்ட ஆடு களங்களின் மேற்பரப்பில் விளை யாடி 22 Grand Slam வெற்றிகளைப் பெற்றது ஒரு சாதனையே. வெம்பிள்டன் மைதானத்தில் உள்ள புல் தரையானாலும், லேறன்ட்காரஸ் இல் உள்ள களிமண் தரையானாலும் சரி, பிளின்டஸ் பூங்காவிலுள்ள மீன் எழும் தன்மையுள்ள தரையானாலும் சரி ஸ்டெபிக்கு நிகர் ஸ்டெபி என்பதை நிரூபித்துவிட்டார். உலகிலேயே ஆகக் குறைந்தது, 4 தரம் ஒவ்வொரு Grand Slamஐ வென்றவர் இத்தாரகை மட்டுமே. முதல் 18 Grand Slam வெற்றிகளைப் பெறுவதற்கு மாட்டினாவுக்கும், கிறிஸ் எவற்டிகும் 13 வருடங்கள் பிடித்தன. மாக்கிறட் கோட் இற்கு 11 வருடங்கள் பிடித்தன. ஆனால் ஸ்டெபிக்கு ஒன்பது வருடங்கள் மட்டுமே எடுத்தன.

ஸ்டெபி தன் டெனிஸ் கால வாழ்க்கையில் 107 சம்பியன் வெற்றிகளைப் பெற்றிருக்கிறார். தனது முழங்காலில் ஏற்பட்ட காயத்தினாலும் நாரியில் ஏற்பட்ட நோவினாலும் 1996, 1997இல் பெரிய ஆட்டங்களில் சரியாக கலந்து கொள்ளவில்லை. 1999இல் French Open இல் நிலை 1,2,3இல் இருந்த கிங்கிஸ், டெவன்போட், செலன் ஆகியோரை அடுத்தடுத்து தோற்கடித்து ஜ"ன் 5ம் திகதி சம்பியனானார். ஆனால் இரண்டு மாதங்களின் பின் தனது ஓய்வு பற்றி செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

உலகத்தில் பல கோடி டாலர்களை டெனிஸ் விளையாட்டின் மூலம் சம்பாதித்த பெண்மணி ஸ்டெபி தான். 5அடி 10அங்குல உயரமுள்ள, வசீகரமான தோற்றமுடைய ஸ்டெபி இன்னும் திருமணம் செய்யவில்லை. புகழின் உச்சியில் இருந்துகொண்டே 30 வயதில் ஓய்வு பெற்றது ரசிகர்களுக்கு ஒரு ஏமாற்றமே. இருந்தாலும் ஏறக்குறைய 12 வருடங்கள் ரசிகர்களுக்கு தனது அபாரத்திறமையால் விருந்து படைத்த ஸ்டெபிக்கு சபாஷ் போடலாம்.

• *வாசு*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Tamil Guardian
International



**தமிழீழத்தை நோக்கிய.....**
**ஒரேயொரு ஆங்கிலப் பத்திரிகை**

தொடர்புகளுக்கு
பரமு சிவசுப்பிரமணியம்

**TO ADVERTISE CALL:**
**(416) 516-0578**

P.O. Box 99025, 1245 Dupont St.
Toronto Ont. M6H 4H7
**Tel: (416) 516-0578**
**Fax: (416) 536-9463**
Web Site: www.tamilguardian.com

**தமிழ் மக்கள் மத்தியில் வெளிவரும்**
**ஒரே ஒரு ஆங்கிலப் பத்திரிகை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாயிபாமாவின்

# குறுக்கெழுத்துப்

## போட்டி இல: 1

**இடமிருந்து வலம்:-**

1. எந்தக் காரியத்தை ஆரம்பிக்கும் முன் இவரை வணங்கி ஆரம்பித்தால் எல்லாம் வெற்றி தான்.

7. யானையின் ஆண் களிறு. பூனையின் ஆண் இங்கு தடுமாறி வருகிறது.

13. கங்கை அமரன் இசைஞானி இளையராஜாவுக்கு இந்த உறவு. வீட்டில் இளையவனையும் செல்லமாக இப்படியும் அழைக்கலாம். இளையவன் என்பதால் இறுதி எழுத்தையும் இழந்தோ வரவேண்டும்?

19. பதினாறு வயதிலிருந்து முப்பது வயதிற்குட்பட்ட ஆண்மகன் இங்கு குழம்பி வருகிறார். வீரனையும் இப்படி அழைப்பதுண்டு.

23. தமிழ் நாட்டின் எழுத்தாளர் இருவரில் ஒருவர் கோபு. மற்றவர் சதுரங்களுள் அடைக்கப்பட்டு சங்கடப்படுகிறார்.

31. தாயக விடுதலைக்காக தம்மைத் தந்த உத்தமர்கள். இவர்கள் வீரத்தைக் கண்டு எதிரிப்படை அஞ்சுவது போல இறுதி எழுத்தும் அஞ்சி ஒடுங்கி நிற்கிறது.

**மேலிருந்து கீழ்:-**

1. உண்பதற்கு உணவு வேண்டும். உடுப்பதற்கு ஆடை வேண்டும். இருப்பதற்கு வீடு வேண்டும். இவை மட்டும் இருந்தால் போதுமா? இது இல்லாவிட்டால் வாழ்க்கை உப்பற்ற உணவு தான்.

2. முத்தமிழில் ஒன்று குழம்பி வருகிறது.

3. நான்முகனின் ஒரு தலையை வைரவர் எடுத்ததால் முதல் எழுத்தின்றி அடைபட்டிருக்கிறார் படைத்தற் கடவுள்.


4. துயரம், துன்பம், துக்கம், எல்லாம் இதன் ஒத்த கருத்துகள். விடை தெரியாது போனால் நீங்கள் கவலை கொள்ளத் தேவையில்லை.

12. இந்த உயிரினம் உறங்கும் போது கண்களை மூடுவதே இல்லையாம். ஏன் தெரியுமா? அதற்குத் தான் இமைகளேயில்லையே. இது என்றால் படையும் நடுங்கும் என்பர். அட இது தெரியாதா உங்களுக்கு?

21. சூரியனின் மறுபெயர் குழம்பி வருகிறது.

23. இவர் ஒரு தடவை சொன்னா நூறு தடவை சொன்னது மாதிரி. உங்களுக்கு இவரை நிச்சயம் தெரிந்திருக்குமே!

**உங்கள் பதில்கள் யாவும் மே 10ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக, 'ரோஜா'வின் முகவரிக்கோ அல்லது தொலைநகலுக்கோ அனுப்பிவையுங்கள்.**
**சரியான பதில்களை எழுதும் அதிஷ்டசாலி ஒருவருக்கு $25.00 பரிசு.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தெனாலி"

கமல் நாயகனாக நடிக்க, டைரக்டர் கே. எஸ் ரவிகுமார் இயக்கி, முதன் முறையாக தயாரிக்கும் "தெனாலி" படத்துவக்க விழா சென்னை கலைவாணர் அரங்கில் நடந்தது. விழாவில் நடிகர்கள் ரஜினிகாந்த், சரத்குமார், அஜித் உட்பட பலர் நேரில் வந்து வாழ்த்தினார்கள்.

ஆர். கே. செலுலாயிட்ஸ் நிறுவனம் சார்பில் ஆர். கற்பகம் தயாரிக்கும் புதிய படம் "தெனாலி". இப்படத்தில் கமல்ஹாசன், ஜெயராம், ஜோதிகா, தேவயானி மற்றும் பலர் நடிக்கிறார்கள். இப்படத்தினை கே. எஸ். ரவிகுமார் டைரக்டு செய்கிறார்.

இப்படத்தின் துவக்க விழா சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்றது. விழாவில் நடிகர்கள் ரஜினிகாந்த், கமல்ஹாசன், சரத்குமார், அஜித், விஜய், மனோஜ், கரண், தியாகராஜன், ரமேஷ்கண்ணா, சரவணன், கவுண்டமணி, அருண்குமார், மன்சூர்அலிகான், ஜனகராஜ், ராஜா மற்றும் நடிகைகள் ஜோதிகா, மீனா, கோவை சரளா, ரம்யாகிருஷ்ணன் லைலா, ஷாலினி, தேவயானி, அம்பிகா, பட அதிபர்கள் கே. ஆர். ஜி, கே. ஆர். கஜாமொய்தீன், ஏ. எம். ரத்னம், முரளிதரன், பிரமிட்... நடராஜன், டைரக்டர்கள் ஏ.சி. திருலோகசந்தர், பாலசந்தர், பாரதிராஜா, ஷங்கர், மணிரத்னம், விக்ரமன், எஸ். பி. முத்துராமன், அகத்தியன், சங்கீதம் சீனிவாசராவ், கதிர், எழுத்தாளர் சுஜாதா, படவிநியோகஸ்தர்கள் சங்க தலைவர் சிந்தாமணி. முருகேசன், தயாரிப்பு நிர்வாகி பி. எல். தேனப்பன், ஒளிப்பதிவாளர் அசோகராஜன் மற்றும் பலர் கலந்து கொண்டு குத்துவிளக்கேற்றி வைத்தனர். சிறப்பு விருந்தினர்களுக்கு கே. எஸ். ரவிகுமாரும், அவரது மனைவி கற்பகமும் மாலை அணிவித்தனர்.

அனாதை குழந்தைகள் காப்பகத்திற்கு கே. எஸ். ரவிகுமார் சார்பில் ரூ.50 ஆயிரம் காசோலையை நடிகர் கமல்ஹாசன் வழங்கினார்.

பத்மபூஷன் விருது பெற்ற நடிகர் ரஜினிகாந்துக்கு கமல்ஹாசனும், கே. எஸ். ரவிகுமாரும் மாலை அணிவித்தனர்.



'சங்கமம்' படத்தின் தயாரிப்பாளர், "எனக்கு 2 கோடி ரூபாய் நஷ்டம்" என்று மேடையில் புலம்பிக்கொண்டிருந்தாலும் அந்தப் படத்தில் நடித்த விந்தியாவின் மார்க்கெட்டில் சூடு ஏற்பட்டிருக்கிறது. மணிவண்ணன் படத்தில் இரட்டை வேடத்தில் நடிக்கிறாராம். நிறைய படங்கள் வருவதால் ஹைதராபாத்திலிருந்து சென்னைக்கு குடிவந்து விட்டாராம். பாதுகாத்த முட்டை உடைஞ்சாலும் குஞ்சு சிறகடித்து பறப்பதில்லையா?' அதைப்போல் அறிமுகமான படம் அடிபட்டாலும் நடித்தவர்களுக்கு வெற்றிச் சிறகுதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டாக்டர். அ. செல்வராஜா

குடும்ப பல்வைத்தியர்

கீதவாணியின் ஆரோக்கிய மஞ்சரி நிகழ்ச்சியில் உங்களைச் சந்தித்துவரும் பல்வைத்தியரின் புதிய நவீன பல்வைத்திய நிலையம்

## EASY SMILE DENTAL CLINIC

**10 Gateway Blvd.S, Suite. 140**
**Donmills, ON M3C 3A1**

TTC இலக்கம் 25 மற்றும் 100 பஸ்பாதையில் உள்ளது.
முன்னும் பின்னும் இலவச வாகன தரிப்பிடவசதியுண்டு.

## 416-696-2273

**(696 CARE)**

வீட்டிற்கு உறுதியான அத்திவாரம் முக்கியம்
**பல்லுக்கு வியாதியற்ற முரசு முக்கியம்**

*சகலவிதமான பல், முரசு, வாய் சம்பந்தப்பட்ட வியாதிகள், கிளிப்போடுதல்.*

*இலங்கை, இங்கிலாந்து, ஓமான் மற்றும் கனடாவில் நியூபவுண்லாந்து உட்பட 25 வருட அனுபவம்.*

*சலரோகம், இருதய நோய் போன்ற மருத்துவ பிரச்சனை உள்ளவர்களின் பல்சிகிச்சையில் பலவருட அனுபவம்.*

## DR. A. SELVARAJAH

(SELVA)

Family Dentist

www.connection.com/~drselva/selva.htm


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ROMI VIDEO



நவீன PROFESSIONAL கமராவின்
படப்பிடிப்பு



கண்களைக் கவருமளவில் கட்டம் கட்டமாக
ரசிக்கத்தக்க எடிட்டிங் உடன் அதற்கேற்ப
பாடல்களும் புதிய EFFECTகளும்



உங்கள் முகங்களையும் எழுத்துக்களையும்
இணைத்து பல வர்ண நிறங்களால்
அச்சிடப்பட்ட வீடியோக் காசட்டின் உறைகள்
இலவசம்



அத்துடன் உங்கள் முற்றுப்பெற்ற வீடியோப்
படத்தை சிடி யில் பதித்துத் தருகிறோம்

மண்டபம், போட்டோ, D.J ஒழுங்குகள்
தொடர்புகளுக்கு

**ROMI VIDEO**
**KUNA**
**Phone:(416) 759-3978**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Canada ROJAH ISSN 1492-4501

உங்கள் இல்லங்களில் முப்பொழுதும் அருந்தும் தேனீர் இருக்கட்டும்!

RG

RICHFUL

அனைத்து தமிழ் வர்த்தக நிலையங்களிலும் விற்பனையாகிறது.

விநியோகத்தர்கள்

SUTHARSIKA TRADERS LTD.

SUTHA
Tel: 519-579-5578
Fax:519-570-1488




சுவையில் முதலிடம்!

Viveka Print. Thamil Creators

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org